20TH MAY 2025

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 78 | பக்கங்கள் - 15
editor.uthayam@gmail.com





# கொழும்பைக் கைப்பற்ற கடும் பிரயத்தனம்

## ஜனாதிபதி, எதிர்க்கட்சிகள் விடாப்பிடி

## பேரம் பேசல்கள் துரிதம்

## ஏனைய சபைகளை நிறுவுவதிலும் இழுபறி

340 உள்ளூராட்சி மன்றங்களில் தேசிய மக்கள் சக்தியின் கட்டுப்பாட்டினை பெறாத நூற்றுக்கும் மேற்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சியை கைப்பற்றுவதில் தேசிய

02ம் பக்கம்பார்க்க...

## போர் நிறுத்தத்தை அமுலாக்கி உணவு முற்றுகையையும் நீக்க வேண்டும்

**நக்பா தின நிகழ்வில் பிரதமர் ஹரிணி வலியுறுத்து**



காசாவில் உடனடி போர் நிறுத்தத்தை வலியுறுத்திய பிரதமர் டாக்டர் ஹரிணி அமரசூரியா, பசி மற்றும் நோய்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு மற்றும் மருத்துவ உதவிகளை வழங்குவதற்கு ஆக்கிரமிப்பாளர்கள் உணவு முற்றுகையை நீக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

02ம் பக்கம்பார்க்க...

## சவூதி அரேபிய மன்னரின் அழைப்பில் ஹஜ்ஜுக்குச் செல்லும் 20 இலங்கையர்



இலங்கையில் இருந்து இம்முறை சவுதி அரேபியா மன்னரின் அழைப்பின் பேரில் 20 பேர் புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்கு செல்லவுள்ளதாக சவுதி அரேபியா தூதுவராலயம் தெரிவித்தது. பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், உலமாக்கள், ஊடகவியலாளர்கள் என

02ம் பக்கம்பார்க்க...

## உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் ஜூன் மாதம் 2 முதல் ஆரம்பம்

**நான்கு ஆண்டுகளில் நிறைவுக்கு வரும்**

மே 6 ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தெரிவான உள்ளூராட்சி மன்றங்களினது

03ம் பக்கம்பார்க்க...

## சமாதானத்தைக் கட்டியெழுப்புவதன் மூலமே முழுமையான வெற்றியை ஈட்ட முடியும்

**தேசிய இராணுவ தின நிகழ்வில் ஜனாதிபதி தெரிவிப்பு**

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்தாலும் இலங்கை முழுமையாக சுதந்திரமடையவில்லை என ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

நேற்று (19) நடைபெற்ற தேசிய இராணுவ நினைவு தின நிகழ்வில்

02ம் பக்கம்பார்க்க...

## விட்டுக் கொடுப்புக்கு இடமில்லை: முழுமையாகக் கைப்பற்றுவோம்

**எச்சரிக்கும் நெதன்யாகு**

காஸாவுக்கு எதிராக இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதலை நிறுத்த சர்வதேச நாடுகள் அழைப்பு விடுத்துள்ள நிலையில் பெஞ்சமின் நெதன்யாகு வெளிப்படுத்திய கருத்தானது போர்

03ம் பக்கம்பார்க்க...

## சவூதி மன்னரின் சொந்த நிதி மூலம் 1000 பலஸ்தீனர்களுக்கு ஹஜ் வாய்ப்பு

(ரிப்தி அலி)

சவூதி அரேபியாவிலுள்ள இரு புனித ஸ்தலங்களின் பாதுகாவலரான மன்னர் சல்மான் பின் அப்துல் அஸ ீஸ் அல் சவூதின் சொந்த நிதியில் 1,000 பலஸ்தீனர்கள் இந்த வருடம் புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

இதற்கான உத்தரவு சவூதி அரேபிய

03ம் பக்கம்பார்க்க...

## குருசாமியின் சுயேட்சைக் குழு தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவு

கொழும்பு மாநகர சபைக்கு போட்டியிட்ட கே.ரி. குருசாமி தலைமையிலான

03ம் பக்கம்பார்க்க...

## 40 வருட கால விடா முயற்சியில் ஹஜ்ஜுக்கு வந்த துப்புறவு பணியாளர்



ஒரு வயதான இந்தோனேசிய துப்புரவுப்

03ம் பக்கம்பார்க்க...




அமானா வங்கியில்
வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## கொழும்பைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் சக்திக்கும் பிரதான எதிர்க்கட்சிகளுக்கும் இடையே பலத்த போட்டி நிலவி வருகின்றது. கொழும்பு மாநகர சபையின் ஆட்சியை தம் பக்கம் எடுப்பதற்காக தேசிய மக்கள் சக்தி சுயேட்சை அணியில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருக்கின்ற கட்சி பிரமுகர்களின் ஆதரவை வேண்டி நிற்கின்றது. திங்களன்று ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க கொழும்பு மாநகர சபையில் போட்டியிட்டு வெற்றி பெற்ற சுயேட்சை குழுக்கள் சிறிய கட்சிகளின் பிரதிநிதிகளை தனித்தனியாக பத்தரமுல்ல யில் உள்ள கட்சித் தலைமையகத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இப்பேச்சு வார்த்தையானது தனித்தனியாகவும் குழுக்களாகவும் நடைபெற்றுள்ளது. இப் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்ட சமாதான மக்கள் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர் கலீலுர்ரஹ்மான் தான் தமது பிரதேசத்தின் அபிவிருத்தி பாடசாலைகளின் பிரச்சனைகள் போன்ற விடயங்களை பேசியதாகவும் அவற்றுக்கான தீர்வினை பெற்று தருவதை பற்றி பேசியதாகவும் அரசாங்கத்திற்கு தமது ஆதரவை தருவது குறித்து பல கருத்துக்களை முன்வைத்ததாகவும் தெரிவித்தார். இது சம்பந்தமான இறுதி முடிவு பின்பே எடுக்கப்படும் என மாகாண சபை உறுப்பினர் கலீலுர் ரஹ்மான் மேலும் தெரிவித்தார். இதே நேரம் ஐக்கிய தேசிய கட்சியுடன் ஐக்கிய மக்கள் சக்தி உட்பட ஏனைய கட்சிகளும் நேற்று சந்தித்து கூட்டாக செயல்படுவதற்கு இணக்கம் காணப்பட்டிருக்கின்றது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நேற்று இடம்பெற்ற கூட்டத்திலேயே இதற்கான இணக்கம் காணப்பட்டிருக்கின்றது. இதன்படி ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டு உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு ஆதரவோடு செயல்படுவதற்கு இணக்கம் காணப்பட்டிருக்கின்றது. இது தவிர கொழும்புக்கு வெளியே நாட்டின் ஏனைய பகுதிகளில் சிறுபான்மை கட்சிகளான ரிஷாட் பதியுதீன், ரவூப் ஹக்கீம் ஆகியோரது கட்சிகளுக்குள்ளும் ஆட்சியை கைப்பற்றுவது தொடர்பாக சில பேச்சுவார்த்தைகள் நடைபெற்று இருக்கின்றன. இவ்வாறு இரண்டு, மூன்று ஆசனங்களை பெற்றிருக்கின்ற கட்சிகளின் ஆதரவை பெறுவதில் எதிர்க்கட்சிகளும் அதேபோன்று ஆளும் கட்சியும் மும்முரமான பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டிருப்பதாக அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது.

சிறுபான்மை மற்றும் குறைந்த ஆசனங்களை பெற்ற கட்சிகளின் ஆதரவை பெறுவதற்கு இரு தரப்பினரும் விலை பேசுவதாகவும் தகவல்கள் கிடைக்க பெறுகின்றன. உர்ஜிதப்படுத்தப்படாத இத்தகவல்களின் படி பல இடங்களில் இந்த ஆதரவை பெறுவதற்கு.....

கொழும்பு மாநகரின் ஆட்சியை தேசிய மக்கள் சக்தி கைப்பற்ற வைக்கும் நோக்கில் பதவியில் உள்ள ஆளுநர் ஒருவரும் முன்னாள் ஆளுநர் ஒருவரும் ஷஷஈடுபட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்கள் இருவரும் முஸ்லீம்கள் ஆவார்கள். தற்போதைய ஆளுநரும் முன்னாள் ஆளுநர் ஒருவரும் (முஸ்லிம்) தீவிரமான பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு வருவதாகவும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது.

## போர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நக்பா 77ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, "நக்பாவை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும் பாலஸ்தீன மக்களின் உரிமைகளை நிலைநாட்டுவதற்கும் சர்வதேச நடவடிக்கை" என்ற ஐ.நா. கருப்பொருளின் கீழ், கொழும்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்நிகழ்வு பாலஸ்தீன தூதரகத்தின் ஒத்துழைப்புடன் இலங்கை - பாலஸ்தீன ஒருமைப்பாட்டு குழுவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பாலஸ்தீன தூதர் இஹான் ஐ.எம். கலீல் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அமைச்சர் பிமல் ரத்நாயக்க, இலங்கை - பாலஸ்தீன ஒருமைப்பாட்டு குழுவின் தலைவர் ஜாசிம் ஜாபர் அல்-சொரூர், இராஜதந்திர பீடத்தின் முதல்வர், ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க்-ஆண்ட்ரே பிரான்சே, இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பிரதமர் தனது உரையில், பாலஸ்தீனத்திற்கு இலங்கை உள்ளூரிலும் சர்வதேச மட்டத்திலும் எப்போதும் ஆதரவாக இருந்து, இரு-நாடு தீர்வை முன்னிறுத்தி செயல்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

அமைச்சர் பிமல் ரத்நாயக்க, சுதந்திரமான பாலஸ்தீன நாட்டிற்காக சட்டமன்ற உறுப்பினர்கள் பிரச்சாரம் மேற்கொள்ள இது சிறந்த வாய்ப்பாக அமையும் என தெரிவித்தார். நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், பாலஸ்தீன விவகாரத்தில் இலங்கை உறுதியாக நின்று, தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் தனது நிலைப்பாட்டை தெளிவாக வெளிப்படுத்த வேண்டும் என வலியுறுத்தினார்.

பிரதி சபாநாயகர் டாக்டர் ரிஸ்வி சாலிஹ், "நாம் ஒரு மனிதாபிமான பேரவலத்தை கண்டு வருகிறோம். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் படுகொலை செய்யப்படுவதை தடுக்க இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்," என கூறினார்.

நிகழ்வில் பாலஸ்தீன தூதர் இஹாப் ஐ.எம். கலீலும் கலந்துகொண்டார்.

## சவூதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

20 பேர்களை சவுதி அரேபிய தூ துவராலயம் இம்முறை தெரிவு செய்துள்ளது. இவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி சவுதி அரேபியா நோக்கி பயணிக்க உள்ளனர்.

இந்தக் குழுவில் ஊடகவியலாளர்களும் இடம்பெற்றுள்ளனர். விடியல் ஆசிரியர் றிப்தி அலியும் அவரது பாரியாரும், அதேபோன்று இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவையின் ரழீனும் இந்த மன்னரின் அழைப்பில் செல்ல உள்ளனர்.

இதே நேரம் ஜனாதிபதி செயலகத்தில் பணிபுரியும் தினகரனின் சிரேஷ்ட ஊடகவியலாளர் எம் எச் எம் பாஹிம் தனது பாரியாருடன் புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்கு தனிப்பட்ட முறையில் செல்லவுள்ளார்

## சமாதானத்தைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி, நாடு முழுமையான வெற்றியில் இல்லை எனவும், முழுமையான வெற்றியை பெற நாட்டில் சட்டத்தின் ஆட்சியையும் சமாதானத்தையும் முழுமையாக நிலைநாட்டுவது மட்டுமே வழியாகும் எனவும் கூறினார்.

மேலும் தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க,

"நாம் போதுமான அளவு இரத்தம் சிந்தியிருக்கிறோம். இந்த மண்ணை ஈரமாக்கும் அளவுக்கு இரத்தம் சிந்திய தேசம் நாம். ஆறுகள் இரத்தத்தால் நிரம்பி வழியும் அளவுக்கு இரத்தம் சிந்திய தேசம் நாம். தாய்மார்கள், தந்தையர்கள், பெற்றோர்களின் கண்ணீர் ஆறுகளை நிரப்பும் அளவுக்கு கண்ணீர் சிந்திய தேசம் நாம். யுத்தத்தின் மிக மோசமான வேதனைகளையும், மிகக் கொடூரமான அனுபவங்களையும் பெற்ற மக்கள் நாம். இவை அனுபவங்களாக இருந்தால், மீண்டும் இத்தகைய நிலைமை ஏற்படுவதைத் தடுக்க வேண்டும்.

நாம் முழுமையான வெற்றியாளர்கள் அல்ல. நாட்டில் சமாதானத்தை உருவாக்குவதன் மூலம் மட்டுமே நாம் முழுமையான வெற்றியாளர்களாக மாற முடியும். எனவே, அச்சமின்றி சமாதானத்திற்காக எடுக்கக்கூடிய ஒவ்வொரு நடவடிக்கையையும் எடுக்க நாம் தயாராக இருக்கிறோம்.

மீண்டும் யுத்தம் குறித்த அச்சம் இல்லாத சமூகத்தை நாம் உருவாக்க வேண்டும். இது மிகவும் கடினமான முயற்சி என்பது எனக்குத் தெரியும். ஆனால், எவ்வாறேனும் இந்த முயற்சியில் நாம் வெற்றியடைய வேண்டும். வடக்கிலும் தெற்கிலும் அதிகாரத்திற்காக இனவாதம் மீண்டும் தலைதூக்கத் தொடங்கியுள்ளது.

உண்மையான தாய்நாட்டு சுதந்திரம் என்றால், யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்ததன் மூலம் தாய்நாட்டின் முழுமையான சுதந்திரத்தை நாம் பெறவில்லை. தாய்நாட்டின் முழுமையான சுதந்திரம் என்றால் என்ன? இன்றும் மழை பெய்யத் தொடங்கும் போது, நாம் அச்சப்படுகிறோம். நிலச்சரிவு அபாயம் உள்ள பகுதிகளில் 4,900 வீடுகள் உள்ளன. எந்தப் பகுதியில் நிலச்சரிவு அபாயம் உள்ளது என்ற அச்சம் இருக்கிறது. இதனால் நாம் சுதந்திரமாக இருக்கிறோமா? உலகில் எங்கேனும் ஒரு மோதல் ஏற்பட்டால், நமது நாட்டின் பொருளாதாரத்திற்கு எவ்வளவு தாக்கம் ஏற்படும் என்ற அச்சம் இருக்கிறது. இதனால் நாம் சுதந்திரமாக இருக்கிறோமா? பொருளாதார ரீதியாக திவாலாகிய நாட்டில் எங்கே நமக்கு சுதந்திரம் இருக்கிறது? எங்கே நமக்கு இறையாண்மை இருக்கிறது? இன்று நாம் பொருளாதார இறையாண்மையை இழந்த நாடாக இருக்கிறோம். இது உண்மை. நமது பொருளாதார முடிவுகளை எடுப்பதற்கு வலிமை இல்லாத தேசம் நாம். எனவே, இந்த தாய்நாட்டை உலகின் முன் பெருமையுடன் நிற்கும் நாடாக மாற்றுவதற்கு, இந்த பொருளாதார மாற்றத்தை நாம் அடைய வேண்டும். எவ்வளவு கஷ்டமாக இருந்தாலும், சட்டத்தின் ஆட்சியை இந்த நாட்டில் நிலைநாட்ட வேண்டும். நமது நாட்டின் ஆட்சி முறைமை குறித்து உலகம் பாராட்டி பேச வேண்டும். குற்றங்கள், போதைப்பொருள், தொற்று நோய்களற்ற நாட்டை நாம் உருவாக்க வேண்டும். மோதல்கள் இல்லாத, வெறுப்பு இல்லாத நாட்டை நாம் உருவாக்க வேண்டும். அங்கே தான் நமக்கு முழுமையான சுதந்திரமும், தாய்நாட்டின் வலிமையான இறையாண்மையும் உருவாகும்" - என்றார்.



## சவூதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னரினால் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக சவூதி அரேபிய ஊடகங்கள் நேற்று (019) திங்கட்கிழமை செய்தி வெளியிட்டுள்ளன.

இதற்கமைய உயிர்த் தியாகம் செய்தோரின் குடும்பங்கள், கைதிகள் மற்றும் காயமடைந்தோர் என பாதிக்கப்பட்ட 1,000 பலஸ்தீனர்கள் புனித ஹஜ் கடமையினை நிறைவேற்றவுள்ளனர்.

இஸ்லாமிய விவகாரங்கள், தஃவா மற்றும் வழிகாட்டல் அமைச்சினால் முன்னெடுக்கப்படுகின்ற இரு புனித ஸ்தலங்களின் பாதுகாவலருடைய விருந்தினர்களாக மேற்கொள்ளும் ஹஜ் மற்றும் உம்ரா திட்டத்தின் ஒரு பகுதியாகவே இது அமைந்துள்ளது.

மிகவும் முக்கியமான இந்த செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக இரண்டு புனித ஸ்தலங்களின் பாதுகாவலருக்கும் பட்டத்து இளவரசரும் பிரதமருமான முகம்மது பின் சல்மான் பின் அப்துல் அஸீஸ் அல் சவூதுக்கும் நன்றியைத் தெரிவிப்பதாக சவூதி அரேபியாவின் இஸ்லாமிய விவகாரங்கள், தஃவா மற்றும் வழிகாட்டல் அமைச்சரும் இத்திட்டத்தின் பொது மேற்பார்வையாளருமான ஷேக் டாக்டர் அப்துல்லதீப் அல் அல்ஷேக் குறிப்பிட்டார்.

"பலஸ்தீன மக்களுக்கான ஆதரவினையும் இஸ்லாமிய சகோதரத்துவத்தின் தொடர்புகளை வலுப்படுத்துவதற்கும் இராச்சியத்தின் தொடர்ச்சியான கவனிப்பினையும் அதன் புத்திசாலித்தனமான தலைமையின் அர்ப்பணிப்பையும் இது பிரதிபலிக்கிறது" எனவும் அவர் கூறினார்.

பலஸ்தீனியர்களும் புனித ஹஜ் கடமையினை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பினை வழங்கும் நோக்கிலேயே இந்த செயற்திட்டம் முன்னெடுக்கப்படுவதாக அமைச்சர் வலியுறுத்தினார்.

ஹஜ் கடமையை நிறைவேற்ற பலஸ்தீனர்கள் அவர்களது நாட்டிலிருந்து புறப்பட்டதிலிருந்து மீண்டும் நாடு திரும்பும் வரை அவர்களுக்குத் தேவையான அனைத்து சேவைகளையும் வசதிகளையும் வழங்குவதற்கான விரிவான திட்டத்தை அமைச்சு உடனடியாக செயற்படுத்தத் தொடங்கியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த 1997ஆம் ஆண்டு (ஹிஜ்ரி 1417) இரு புனித ஸ்தலங்களின் பாதுகாவலருடைய விருந்தினர் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இன்று வரை பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 64,000க்கும் மேற்பட்டோர் ஹஜ் மற்றும் உம்ரா கடமையினை நிறைவேற்றியுள்ளனர்.

இது இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் சேவை செய்வதற்கும் இஸ்லாமிய உலகின் இதயமாகவும் முஸ்லிம்களின் கிப்லாவாகவும் அதன் நிலையை வலுப்படுத்துவதற்கும் இராச்சியம் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்ற முயற்சிகளைப் பிரதிபலிக்கிறது என அமைச்சர் ஷேக் டாக்டர் அப்துல்லதீப் அல் அல்ஷேக் மேலும் தெரிவித்தார்.

## விட்டுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுத்தத்துக்கான அழைப்பை புறக்கணிக்கும் விதமாக அமைந்துள்ளது.

இதற்கமைய காஸா பிராந்தியத்தை தமது முழுமையான கட்டுபாட்டுக்குள் கொண்டுவரும்வரை தாக்குதல் தொடரப்படும் என அவர் கூறியுள்ளார். 2023ஆம் ஆண்டு முதல் பாலஸ்தீனம் மீது இஸ்ரேல் போரை தீவிரப்படுத்தி வருகிறது.

இதுவரை இஸ்ரேலின் தாக்குதலில் 60,000 பேர் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த மூன்று நாட்களில், காஸாவில் சுமார் 500க்கும் மேற்பட்டோர் இஸ்ரேலின் தாக்குதலில் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் நேற்று பாலத்தீனத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு கொண்டு செல்லும் வாகனங்களை இஸ்ரேல் அனுமதித்திருந்தது.

ஆனால், ஹமாஸை முற்றிலும் ஒழிக்க முடியாமல் திண்டாடும் இஸ்ரேல், காஸா பகுதி முழுவதையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர உள்ளதாக தற்போது கூறியுள்ளது. மேலும், "ஹமாஸுடன் சண்டை தீவிரமாக இருக்கிறது.

நாங்கள் முன்னேறி வருகிறோம். விரைவில் காஸா முழுவதையும் கட்டுக்குள் கொண்டு வருவோம். இதில் நாங்கள் விட்டுக்கொடுக்க மாட்டோம். எங்கள் வெற்றியை தடுக்க முடியாத வகையில் நாங்கள் செயல்படுவோம்" என நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

## 40...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணியாளரும், அவரது மனைவியும் 40 ஆண்டுகால விடாமுயற்சி, சேமிப்பிற்குப் பிறகு ஹஜ் யாத்திரை செய்வதற்கான தங்கள் வாழ்நாள் நிறைவேற்றியுள்ளனர்.

சவுதி பத்திரிகை நிறுவனத்திடம் பேசிய ஹஜ் லெஜிமான்இ தனது ஆழ்ந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்திஇ மகிழ்ச்சி மிகப்பெரியது. இறுதியாக நான்இ என் கண்களால் காபாவைப் பார்ப்பேன் என்று நான் ஒருபோதும் நினைத்துப் பார்க்கவில்லை. முதலில் அல்லாஹ்வுக்கு நன்றி கூறுகிறேன், பின்னர் எங்களை ஆதரித்த அனைவருக்கும் கூறுகிறேன்.

1986 ஆம் ஆண்டு என் மனைவியின் ஆதரவுடன் சேமிக்கத் தொடங்கினேன், கடினமான வாழ்க்கை நிலைமை, கழிவுகளை சேகரிக்கும் கடின உழைப்பு இருந்தபோதிலும், ஒரு நாளைக்கு 1,000 ரூபாயை விட அதிகமாக ஒதுக்கி வைக்கவில்லைஇ இவை அனைத்தும் ஹஜ் செய்ய வேண்டும் என்ற எனது கனவை நனவாக்குவதற்காக. சவால்கள் இருந்தபோதிலும், நாங்கள் ஒருபோதும் நம்பிக்கையை இழக்கவில்லை. இந்த ஆண்டு (2025) ஹஜ்ஜுக்கு இறுதியாக பதிவு செய்யும் வரை நானும் என் மனைவியும் தொடர்ந்து சேமித்து வந்தோம்.

## குருசாமியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுயேட்சைக்குழு (லாந்தர் சின்னம்), தேசிய மக்கள் சக்திக்கு கொழும்பில் நிபந்தனையற்ற ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளது.

இருவர் மட்டுமே அடங்கிய கே.ரி.குருசாமி தலைமையிலான சுயேட்சைக்குழு இன்று (19) ஜனாதிபதியை சந்தித்தபோதே இத்தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

## உள்ளூராட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதவிக்காலம் ஜூன் இரண்டாவது திகதி ஆரம்பமாகும் என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்தது. இவர்களுடைய பதவிக்காலம் 4 வருடங்கள் ஆகும். தேர்தல் ஆணைக்குழு இத்தகவலின் படி ஜூன் மாதம் இரண்டாம் திகதிக்கு முன் தேர்தலில் தெரிவான கட்சி சார்பில் நியமிக்கப்படுகின்றவர்கள் பற்றிய விவரங்களை சமர்ப்பிக்குமாறு தேர்தல் ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

336 உள்ளூராட்சி மன்றங்களிலும் பெரும்பான்மை பெறாத உள்ளூராட்சி மன்றங்களது தலைவர்கள் , பிரதி தலைவர்களை தெரிவு செய்வது இரண்டாம் திகதி இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. பெரும்பான்மையாக ஆசனங்களை பெற்ற உள்ளூராட்சி மன்றங்கள் நமது தலைவர்களை நியமித்துக் கொள்ள முடியும் என்றும் ஏனையவர்கள் வாக்களிப்பு மூலம் தெரிவு செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் மற்றும் சவூதி அரேபிய தூதுவர் இடையே விஷேட சந்திப்பு!



அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் அல்கஹ்தானியை, வெள்ளிக்கிழமை (16) கொழும்பிலுள்ள சவூதி அரேபிய தூதரகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

"இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவருடன் ஒரு சுமூகமான மற்றும் பயனுள்ள சந்திப்பை மேற்கொண்டதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இதன்போது, பல்வேறுபட்ட சமகால பிரச்சினைகள் குறித்து நாங்கள் விரிவாகக் கலந்துரையாடினோம். மேலும், நமது இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்பு மற்றும் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்தும் ஆராய்ந்தோம். இதேவேளை, தூதுவரின் அன்பான விருந்தோம்பலையும், இருதரப்பு உறவுகளை வளர்ப்பதற்கான அவரது தொடர்ச்சியான அர்ப்பணிப்பையும் நான் பாராட்டுகிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

# மூத்த சட்டத்தரணியும் அரசியல் வாதியுமான ஏ.எல்.எம்.யூஸுப் காலமானார்



மூத்த சட்டத்தரணியும் கேகாலை மாவட்டத்தின் பிரபல அரசியல்வாதியும் கட்டாருக்கான முன்னாள் தூதுவருமான ஏ.எல்.எம்.யூஸுப் காலமானார். இவர் கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிமின் சிற்றப்பாவும் ஜனாதிபதி சட்டத்தரணி பரிஸ்டர் ஏ.எல். எம்.ஹாசிமின் சகோதரரும் ஆவார்.

மாவனல்லை பட்டின சபையின் முன்னாள் தலைவராக பணி புரிந்த இவர் கேகாலை மாவட்டத்தில் ஐ.தே.க சார்பில் போட்டியிட்டார். பிரபல இஸ்லாமிய பாடகரான இவரின் பாடல்கள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பப்பட்டது.

95 வயதான இவர் ஜனாதிபதி சட்டத்தரணி இக்ராம் முஹம்மத், பொறியாளர் றிபாஸ் ஆகியோரின் மாமனாருமாவார்.




www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2025 MAY 20 - TUESDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# பலஸ்தீன் பிரச்சினைக்கு தீர்வு காண இலங்கையின் சகல கட்சிகளும் ஆதரவு!

1948 ஆம் ஆண்டு 500க்கும் மேற்பட்ட கிராமங்களில் இருந்து ஏழரை லட்சத்திற்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்களை தமது பிறந்த பூமியிலிருந்து வெளியேற்றி 25 வது ஆண்டு நிறைவு கடந்த 15 ஆம் தேதி இடம்பெற்றது. பல நாடுகளிலும் இந்த நிகழ்வை உணர்வு பூர்வமாக அனுஷ்டித்தனர். கொழும்பில் பலஸ்தீனிய தூதுவராலயமும் இலங்கை பலஸ்தீன ஒருமைப்பாட்டு இயக்கத்தினரும் இணைந்து ஏற்பாடு செய்த நக்பா நிகழ்வில் பிரதமர் ஹரிணி அமரசூரியவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உட்பட நாட்டின் பிரதான கட்சிகளின் தலைவர்களும் கலந்து கொண்டனர். பலஸ்தீன் தொடர்பாக தொடராக இடம் பெற்ற கூட்டத்தில் பலஸ்தீன் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியதோடு அங்கு இடம் பெற்று வரும் தாக்குதல்களை வன்மையாக கண்டித்ததோடு உடனடி யுத்த நிறுத்தத்துக்கு ஏற்பாடு செய்ய சர்வதேசம் தலையிட வேண்டுமெனவும் கூட்டாக கோரிக்கை விடுத்தனர்.

அரசின் சார்பில் பிரதமரும், ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ் கட்சிகளின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் பொன்னம்பலமும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ரவூப் ஹக்கீமும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் ரிஷாட் பதியுதீனும் தமது உரைகளில் பலஸ்தீன பிரச்சனைக்கு உடன் தீர்வு காணப்பட வேண்டியது தான் அவசியத்தை வலியுறுத்தி உரையாற்றினர். இங்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுனவின் சார்பிலும் பிரதிநிதிகள் கலந்து கொண்டு தமது ஆதரவினை தெரிவித்தனர். அரசாங்கமும் பிரிதிநிதிகளும் பலஸ்தீனில் இடம் பெற்ற மனித அழிவை கண்டித்ததோடு இலங்கையில் ஒருமைப்பாட்டினை மீண்டும் கூட்டாக வலியுறுத்தும் ஒரு நிகழ்வாக கொழும்பில் இடம்பெற்ற நக்பா நிகழ்வு வரலாற்றில் நிச்சயமாக பதிவாகிறது. கூட்டத்தில் பிரதமர் ஆற்றிய உரை பலஸ்தீன் தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாட்டை தெளிவாக வெளிப்படுத்தி இருப்பது குறிப்பிடத்தக்கது.

அண்மை காலங்களில் அரசாங்கத்தின் கொள்கையில் ஏதாவது தடம் புரண்டு விட்டதா என்று வெளிவந்த கேள்விகளுக்கு மறுப்பு தெரிவிக்கும் வகையில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும் உரையாக அது அமைந்திருந்தது. உடனடியாக வன்செயல்களை நிறுத்துமாறு கோரிக்கை விடுத்ததோடு மக்களுக்கு தேவையான உணவு எரிபொருள் மருந்து வகைகள் மின்சாரம் குடிநீர் என்பவற்றை இலகுவாக கிடைப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பிரதமர் இங்கு வலியுறுத்தினார். இங்கு உரையாற்றிய சஜித் பிரேமதாச பலஸ்தீன மக்களுக்கு நீதி கிடைக்க பாராளுமன்றத்தில் சகல கட்சிகளும் கூட்டாக இருக்கின்றோம் என்பதை கூறுவதில் பெருமை கொள்கின்றேன் என உரையாற்றினார். மேலும் இங்கு உரையாற்றிய பலஸ்தீன் தூதுவர் இஹாப் ஐ.எம்.கலீல் நக்பா தினமானது துக்கம் அனுஷ்டிக்கப்படும் ஒரு தினம் அல்ல என்றும் சர்வதேச சமூகமும் உலகின் மிக பழமை வாய்ந்த பிரச்சினைக்கு நீதியான தீர்வு காணும் வரை அதனை வலியுறுத்தும் ஒரு தினம் என அவர் தெரிவித்தார். பலஸ்தீன ஒருமைப்பாட்டு இயக்கத்தின் தலைவர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க அப்பாவிகளை கொன்றொழிப்பதானது மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றச்செயல் என வலியுறுத்தியதோடு முழு மக்களும் இன அழிப்புக்கு உள்ளாக்கப்பட்டு இருக்கின்ற நிலையில் எங்களுக்கு வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார். புதனன்று கொழும்பில் நடைபெற்ற நக்பா நிகழ்வானது முழு இலங்கை மக்களும் இன மத கட்சி வேறுபாடு இன்றி பலஸ்தீனத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வாக அமைந்திருந்தது.

INTERNATIONALLY RECOGNIZED PROGRAMS
DIPLOMA PROGRAMS
TVEC REGISTERED INSTITUTE
- Counseling & Psychology
- Teacher Training
- Business Management
- Spoken English
- AMI Montessori
- Child Psychology
- IT Programs

CALL US FOR MORE DETAILS
0765204604 | 0778877907

Awarded By: INTERNATIONAL PROFESSIONAL ACADEMY, UK
www.ipauk.org.uk
HND (UK) PROGRAMS
- HND (UK) in Business Management
- HND (UK) in Computing
- HND (UK) in Teacher Training
- HND (UK) in Psychology
- HND (UK) in English

CALL US FOR MORE DETAILS
0772703004 | 0767727032

TOP UP DEGREE PROGRAMS
UGC APPROVED
- Bachelors in Psychology
- Bachelor of Education
- BBA / MBA
- BA in English
- BSC IT

CALL US FOR MORE DETAILS
0765204604 | 0767727032

AMAZON COLLEGE
294, 2nd Floor, Galle Road, Colombo 04, Sri Lanka
+94114 386 126 | info@amazoncollege.lk
/amazoncollegelk | www.amazoncollege.lk







பிராந்திய நிருபர்களுக்கான திறந்த விண்ணப்பம்

பத்திரிகைத் துறையில் முன்னணி வளர்ச்சியை எட்டியிருக்கும் உதயம் பத்திரிகைக்கு பிராந்திய நிருபர்கள், சுயாதீன ஊடகவியலாளர்களுக்கான உத்தியோகபூர்வ அங்கத்துவம் வழங்கப்படவுள்ளது.
எனவே, ஆர்வமுள்ளவர்கள் கீழ்காணும் மின்னஞ்சல் முகவரியூடாக அல்லது வட்ஸ்அப் ஊடாக தங்களது சுயவிபரக் கோவையை எதிர்வரும் ஜுலை 05 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

மின்னஞ்சல்:
moonmedia178@gmail.com

Whatsapp / Call:
070 239 7210

# சவூதி அரேபிய தூதுவராலயத்தின் மேற்பார்வையில் இடம்பெற்ற கல்விக் கருத்தரங்கு





**எம்.எஸ்.எம்.ஸாகிர்**

இஸ்லாத்தில் சகவாழ்வு, மத நல்லிணக்கம், பொறுப்புணர்வு, மற்றும் நடுநிலைமை பேணல் என்ற அடிப்படைகளை மையமாகக் கொண்ட கல்விக் கருத்தரங்கின் இறுதிநாள் நிகழ்வுகள் (15) வியாழக்கிழமை கொழும்பில் இடம்பெற்றன.

சவூதி அரேபியாவின் இஸ்லாமிய விவகார, தஃவா மற்றும் வழிகாட்டல் அமைச்சின் அனுசரனையுடன் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்து கொழும்பிலுள்ள சவூதி அரேபிய தூதுவராலயத்தின் மேற்பார்வையில் இடம்பெற்ற இந்தக் கல்விக் கருத்தரங்குகளின் இறுதி நாள் நிகழ்வில் சவூதி அரேபியத் தூதுவர் காலித் ஹமூத் அல்-கஹ்தானி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இக்கல்விக் கருத்தரங்கின் அங்குரார்ப்பண அமர்வு (14) புதன்கிழமை விளையாட்டுத் துறை அமைச்சின் கேட்போர் கூடத்திலும் இறுதி நாள் நிகழ்வு கொழும்பு டவர் மண்டபத்திலும் இடம்பெற்றன.

அங்குரார்பண அமர்வில் சவூதி அரேபியாவின் கலாசார அமைச்சின் ரியாத் பிரிவிற்குப் பொறுப்பாகவுள்ள முஹம்மத் பின் சுலைமான் அல் புரைஹ் சிறப்புரையாற்றியதோடு, இறுதிநாள் நிகழ்வில் முஹம்மட் பின்த் ஹசன் அல்-செஹ்றி சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்வுகளில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ் உட்பட திணைக்களத்தின் யரதிகாரிகள், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் பிரதிநிதிகள், கொழும்பு மாவட்ட பள்ளிவாசல் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் மற்றும் கொழும்பு வட பிராந்திய அரபுக் கல்லூரியின் பிரதிநிதிகள் உள்ளிட்ட 2000க்கு மேற்பட்ட உலமாக்கள், புத்திஜீவிகள், அரச உயர் அதிகாரிகள் அரபுக் கல்லூரி விரிவுரையாளர்கள் மற்றும் உஸ்தாத்மார்கள், உயர் தர மாணவர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் எனப் பலரும் நிகழ்வில் பங்குபற்றி இதன்மூலம் நன்மையடைந்தனர்.

விளையாட்டுத் துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் (14) புதன்கிழமை இரண்டு அமர்வுகளும் (15) வியாழக்கிழமை டவர் மண்டபத்தில் மேலும் இரண்டு அமர்வுகளுமாக இரண்டு நாட்களும் 4 அமர்வுகள் இடம்பெற்றன.

இறுதிநாள் நிகழ்வில், சிறப்புரை யாற்றிய முஹம்மட் பின்த் ஹசன் அல்-செஹ்றி முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்ள் திணைக்களத்தினால் நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

சவூதி அரேபிய அரசின் பூரண அனுசரணையில் வரலாற்றில் முதல் தடவையாக இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்ள் திணைக்களத்தினால் சவூதி அரேபிய மன்னர் உட்பட்ட சவூதி அரேபிய அரசுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.





# இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் ஸ்டாலின்

**எம். கே. ஷாகுல் ஹமீது**
**திருச்சி**

திருச்சி, எம்.ஐ.இ.டி. பொறியியல் கல்லூரியில் வெள்ளிக்கிழமை மாலை உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஒன்பதாம் மாநாடு நடைபெற்றது. மாநாட்டுக்கு இஸ்லாமிய இலக்கிய கழகம் தலைவர் முனைவர் சேமுமு முகமதலி தலைமை வகித்தார். மாநாட்டை சிறுபான்மை ஆணையத்தின் துணைத் தலைவர் இறையன்பு குத்தூஸ் இஸ்லாமிய கீதங்களை தொடங்கி வைத்தார். விழாவிற்கு வந்த அனைவரையும் கழகத்தின் செயலாளர் முனைவர் அஹமது மரைக்காயர் வரவேற்று பேசினார்.

அமைச்சர்கள் கே. என். நேரு, அன்பில் மகேஷ் பொய்யா மொழி, ஆவடி நாசர், சீவி மெய்யநாதன், மாநிலங்களவை உறுப்பினர்கள் திருச்சி சிவா, புதுக்கோட்டை எம். எம். அப்துல்லா, முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம், மலேசிய டத்தோஸ்ரீ சரவணன், திருச்சி எம்ஐஇடி கல்லூரி நிறுவனங்கள் தலைவர் முஹம்மது யூனுஸ், கல்லூரி துணைத் தலைவர் முனைவர் எம். ஒய்.அப்துல் ஜலீல், இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் நிசாம் காரியப்பர் எம். பி., சட்டமன்ற உறுப்பினர் ப அப்துல் சமது, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநாட்டில் பல்வேறு துறைகளில் சாதனைகளை படைத்த 10 பேருக்கு முதல்வர் மு. க. ஸ்டாலின் விருது மற்றும் கேடயங்களை வழங்கி அவர் பேசியதாவது : நானும், திராவிட முன்னேற்றக் கழகமும் எந்தளவுக்கு, சிறுபான்மையின மக்கள் மேல் அக்கறையோடு செயல்படுகிறோம் என்று உங்கள் எல்லோருக்கும் நன்றாக தெரியும். உங்களுக்கான பாதுகாப்பு அரணாக மட்டுமில்லை, உங்களுக்கான உரிமைகளையும், சலுகைகளையும் வழங்குவதில், திமுக அரசுதான், என்றைக்கும் முதன்மையான அரசாக விளங்கி கொண்டிருக்கிறது.

கடந்த நான்காண்டுகளில், சிறுபான்மையின மக்களுடைய சமூக, பொருளாதார, கல்வி நிலைகளை மேம்படுத்துவதற்காக ஏராளமான திட்டங்களை, சாதனைகளை படைத்திருக்கிறோம். அண்மையில்கூட, நங்கநல்லூரில் 'தமிழ்நாடு ஹஜ் இல்லம்' ட்டப்படும் என்று அறிவித்தேன். பலரும் என்னிடம் மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டார்கள்.

இதேபோல், நம்முடைய திராவிட மாடல் அரசில் ஏராளமான திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி கொண்டிருக்கிறோம். அதே நம்பிக்கையுடன் தான் நீங்களும் சில கோரிக்கைகளை இந்த மாநாட்டு மூலமாக, தீர்மானங்களாக வடித்தெடுத்து சொல்லியிருக்கிறீர்கள். முதல் அறிவிப்பு , திருநெல்வேலி மாவட்டத்தில் மாபெரும் நூலகம் அமைக்கப் படும் என்று ஏற்கனவே நிதிநிலை அறிக்கையில் சட்டமன்றத்தில் நான் அறிவித்திருக்கிறேன். அந்த நூலகத்திற்கு கண்ணியத்திற்குரிய காயித மில்லத் அவர்கள் பெயர் சூட்டப்படும்.

இரண்டாவது அறிவிப்பு, சென்னை பல்கலைக் கழகத்தில், இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆய்வு இருக்கையை தமிழ்நாடு அரசு ஏற்படுத்தி தரவேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறீர்கள். இந்த கோரிக்கையை ஏற்று இதை அமைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதை உறுதியோடு தெரிவித்துக் கொள்கிறேன். கவிக்கோ என்றதும் தலைவர் கலைஞர் சொன்னதுதான் எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது.

"வெகுமானம் எதுவேண்டும் என்று கேட்டால், அப்துல் ரகுமானை தான் கேட்பேன்" என்று தலைவர் கலைஞர் சொன்னார் இதைவிட பெரிய பாராட்டு நிச்சயமாக இருக்க முடியாது அப்படிப்பட்ட கவிக்கோ அவர்களுடைய நூல்களைதான், சில நாட்களுக்கு முன்னால், நாட்டுடைமையாக்கி, அவரது குடும்பத்திற்கு, பத்து லட்சம் ரூபாய் நிதி வழங்கியிருக்கிறோம். அவரது பிறந்தநாளை அரசு விழாவாக கொண்டாட ஆணையிட்டிருக்கிறோம். அதேபோல், தி.மு.க. வினருடைய நெஞ்சிலும் தினமும் ஒலித்துகொண்டு இருக்கும் குரலுக்குச் சொந்தக்காரர், 'இசைமுரசு' நாகூர் ஹனிபா அவரது நூற்றாண்டு பிறந்த நாளையும், அறிவியல் தமிழ் அறிஞரான மணவை முஸ்தபா பிறந்தநாளையும் அரசு விழாவாக கொண்டாட ஆணையிட்டிருக்கிறோம்.

இப்படி, "இஸ்லாம் எங்கள் வழி, இன்பத் தமிழ் எங்கள் மொழி" என்று வாழ்ந்த பெருமக்கள் தமிழ்நாட்டில் அதிகம். சிந்தையள்ளும் 'சீறாபுராணம்' தந்த உமறுப்புலவர், புலவர்களுக்கு கொடுப்பதையே கடமையாக கருதிய வள்ளல் சீதக்காதி செய்குத் தம்பி பாவலர், குணங்குடி மஸ்தான் சாகிபு, கவி கா.மு.ஷெரீப், நீதியரசர் எம்.எம்.இஸ்மாயில். இப்படி பல்வேறு இஸ்லாமிய இலக்கிய பெருமக்கள் தமிழுக்கு தொண்டாற்றி இருக்கிறார்கள். இஸ்லாமிய தமிழ் இலக்கியத்திற்கு என்று 9 நூற்றாண்டு கால வரலாறு இருக்கிறது.

'இணைப்பே இலக்கியம்' என்பதை இந்த மாநாட்டின் நோக்கமாக வைத்திருக்கிறீர்கள். இந்த காலத்திற்கு தேவையான இணைப்புதான். இலக்கியத்திற்கு மட்டுமல்ல, இதயங்களுக்கும் தேவையான இணைப்புதான், இப்படிப்பட்ட இணைப்பை, இலக்கியங்களும் இதுபோன்ற இலக்கிய மாநாடுகளும் உருவாக்கவேண்டும். நிச்சயம் உருவாக்கும் என்று நான் நம்புகிறேன். தமிழ் நம்மை இணைக்கும். இலக்கியம் நம்மை இணைக்கும், எனவே, தமிழால் நாம் இணைவோம், தமிழர்களாய் நாம் இணைவோம், இதயங்களால் இணைவோம். இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் மாநில பொதுச் செயலாளர் கே. ஏ. எம். முஹம்மது அபூபக்கர், மாநில முதன்மை துணைத் தலைவர் எம். அப்துல் ரஹ்மான், மாநில செயலாளர் ஆடுதுறை ஷாஜகான், மாநில துணைச் செயலாளர் அப்துல் ரஹ்மான் ரப்பாணி, காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் பீட்டர் அல்போன்ஸ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம் ஜி. கே. நிஜாமுதீன், திருநெல்வேலி மாவட்ட தலைவர் எல். கே. எஸ். மீரா மைதீன், திருச்சி தெற்கு மாவட்ட தலைவர் கே. எம். கே. ஹபீபுர் ரஹ்மான், தேசிய மகளிர் அணி தலைவி பாத் திமுக முஸ்ஸபர், மாநில மகளிர் அணி பொருளாளர் ஜய்த்தூன், மூத்த ஊடகவியலாளர் திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது, சென்னை அப்துல் காதர், திருச்சி ஜமால் முகமது கல்லூரி தாளாளர் மற்றும் செயலாளர் முனைவர் ஏ. கே. காஜா நஜ்முதீன், பொருளாளர் ஜமால் முஹம்மது, கவிஞர் சல்மா, எம். எஸ்.எப். மாநில தலைவர் அன்சர் அலி மற்றும் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். நிகழ்ச்சிகளை திருச்சி எம்ஐஇடி பொறியியல் கல்லூரி முதல்வர் முனைவர் நவீன் சேட் தொகுத்து வழங்கினார். இறுதியில் இஸ்லாமிய இலக்கிய கழகத்தின் பொருளாளர் எஸ். எஸ். ஷாஜகான் நன்றி கூறினார்.

## வாசிப்பீராக! 28



பிஸ்தாமி அஹமத்

# வாசிப்பும் வயதெல்லையற்ற அதன் பரிமாணங்களும்

வாசிப்பு வாழ்நாள் நீடித்த செயற்பாடு என்பதற்கு அமைய அதற்கு வயது எல்லையோ காலம் இல்லையோ பால் ரீதியான வேறுபாடு கிடையாது. ஒவ்வொருவரும் தத்தமது விருப்பு துறைகளுக்கு ஏற்ற ஆர்வத்துக்கு அமைய வாசிப்பை ஆழமாகவும் அகலித்தும் விசாலிக்கச் செய்யலாம்.

இஸ்லாமிய வரலாற்றை பொறுத்தளவில் இறுதி தூதராக முஹம்மதை (ஸல்) அல்லாஹ் நபியாக தெரிவு செய்யும் போது அவருக்கு வயது நாற்பது. இறைவன் ஏவிய முதல் வசனம் “வாசிப்பீராக” அதற்கு நபியவர்களது பதில் எனக்கு வாசிக்க முடியாது என்பது தான்.

ஆனாலும் எழுத்தும் வாசிப்பும் வாழ்வும் படைத்த இறைவனும் பின்னிப்பினைந்தாற் போல அதனையே முதல் ஐந்து வசனத்திலும் இறைவன் மீள மீள வலியுறுத்திக் கூறி அழுத்தமாகவே அதன் எல்லையற்ற செயற்பாட்டுக்கு தூண்டுதல் தருகின்றான்.

முஸ்லிம்கள் பங்கெடுத்த சத்தியத்திற்கான போராட்டத்தில் கூட சிறைபிடிக்கப்பட்டவர்கள் தமது விடுதலைக்காக மதீனத்து சிறுவர்களுக்கு வாசிக்கக் கற்றுக் கொடுப்பதுதான் நிபந்தனையாக விடப்பட்டது.

நாற்பது வயது கடந்தும் வாசிக்க வேண்டும். வாசிக்க முடியாவிட்டால் முயற்சி செய்து வாசிக்க வேண்டும்.

படைத்த உமது இரட்சகனின் பெயரை வைத்து வாசிப்பீராக என்பது இந்த உலகில் உயிர் வாழும் வரை வாசிப்பீராக என்று அர்த்தம் கொள்ளலாம். அதுதான் இன்று வேறு வார்த்தையில் வாழ்நாள் நீடித்த கல்வியாக பரிணாமம் பெற்றுள்ளது. life long education

இறுதித்தூதர் கொண்டு வந்த தூதின் முதல் கட்டளை வாசிப்பீராக என்பது தான். எனவே குழந்தைகளுக்கு முதலில் பழக்க வேண்டியதும் வாசிப்புதான். காரணம் இஸ்லாத்தில் தொழுகையை ஏவுவதற்கு நியமிக்கப்பட்டுள்ள ஆரம்ப வயதெல்லை 7. தொழுகையை மிகச் சரியாக கற்றுக்கொள்ள மூன்று வருடங்கள் அதற்கு பயிற்சி தர வேண்டும்.

ஆனால் வாசிப்பு பழக்கம் அதனை விடவும் முந்தியது. காரணம் சுமார் ஆறு வயதில் பிள்ளைகள் பாடசாலைக்கு உள்வாங்கப்படுகின்றனர். எனவே பருவ வளர்ச்சிக்கும் விருத்திக்கும் அமைவான அளவில் வாசிப்பு பயிற்றுவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

பெருத்தளவில் சொல்லப்படக்கூடிய ஓர் உதாரணம் தான், தனது பிள்ளையை பாடசாலைக்குச் சேர்க்க வேண்டிய வயதெல்லையை அறிந்து கொள்வதற்காக உளவள ஆலோசகர் ஒருவரிடம் சென்ற தாயிடம்  பிள்ளையின் வயதை வினவிய பொழுது ஆறு வயதெனக் கூற பிள்ளையின் ஏழு வருடங்களை வீணடித்து விட்டீர்கள் என்றதும் அதிர்ந்து போன தாய் பிள்ளையின் வயது ஆறு என்பதை மீண்டும் உறுதியாகக் கூற அந்த உளவள ஆலோசகரோ குழந்தை உங்கள் வயிற்றிலிருந்த ஒரு வருடத்தை பயனற்ற வகையில் வீணாக்கி விட்டீர்களே என்றார். இந்த ஒரு வருடம் அவருடைய ஆளுமை உருவாக்கத்தில் மிகப்பெரிய இடைவெளியை ஏற்படுத்தி விட்டதாக சொன்னார்.

வாசிப்பு எப்போதும் வணக்கமாக அமைந்து விடுகிறது. அது நிதானத்தை நிம்மதியை தருகிறது. வாசிப்பால் நீண்ட காலம் கூட வாழ முடியும்.

எமது சமூகம் வாசிப்பை விட்டும் ஏன் தூரமாகி விலகி இருக்கின்றது இன்று வினாவை என்னை நோக்கி விடுத்தால் பிள்ளைகளை வாசிப்பதற்கு பழக்கவில்லை பயிற்சி கொடுக்கவில்லை வழமையாக்கிக் கொள்ளவில்லை என்பதுதான் விடையாக கிடைக்கும்.



# ஷாபியின் சவால்கள் நட்பாய்த் தந்த நஞ்சு!

(சுஜப் எம்.காசிம்)

தனிப்பட்ட ஒருவரைக் குறிவைத்து ஒரு சமூகத்தையே குற்றவாளியாகக் காண்பிப்பதற்காக எடுக்கப்பட்ட சதிமுயற்சியின் தற்காலிக  வெற்றியை தத்ரூபமாகப் படம் பிடித்துள்ள நூலிது. இந்த முயற்சி ஏன் எடுக்கப்பட்டது? இந்தச் சந்தேகத்திற்கான தெளிவை, இந்நூலில் கருத்துக்கள் நகர்த்தப்பட்டுள்ள பாங்கும் கையாளப்பட்டுள்ள மொழி ஓடலின் பாணியும் வாசகர்களுக்கு  மிக எளிமையாக விளக்குகின்றன.

ஆட்சியதிகாரத்தை அடையும் வெறித்தனமே இந்த சதிமுயற்சியின் இயங்குமுறையாகும். ஒரு ஒழுங்குமுறையில் இந்த சதி இயக்கப்பட்டுள்ளதை நூலைப் பூரணமாகப் படிப்போர்  புரிந்துகொள்ள முடியும். தேர்தலொன்றுக்கான திகதியை நெருங்கும் வரைக்கும் டொக்டர் ஷாபியின் வழக்கு விசாரணைகள் இழுத்தடிக்கப்பட்டு, சோடனை செய்யப்பட்டதும் இதற்காகத்தான். இந்த உண்மையை விவாதங்கள் அல்லது சந்தர்ப்பவாத சாட்சியங்களால் மூடி மறைக்க முயன்ற இனவாதம் இறுதியில் தோற்றேபோய்விட்டது.

காலத்தின் சாட்சிக்கு முன்னால், சகலரும் கை கட்டியவாறும் வாய் பொத்தியவாறும் நிற்க நேரிட்டுமுள்ளது. ஒருவகையில், இதுவே இறை நீதியாகிறது. அறிவுக்குப் புறம்பாகவும் கள யதார்த்தங்களை கைவிட்டவாறும் பின்னப்படும் சதிவலைகள், என்றோ ஒருநாள் நாலு பேரறியவும் நாடே சிரிக்குமாறும் நடுச்சந்தியில் கிழித்தெறியப்படும். இந்த உண்மைக்கு டொக்டர் ஷாபிக்கு எதிரான சோடனைச் சம்பவங்களே சாட்சி.

நிரந்தரமான நீதி கிடைக்கும் வரைக்குமான காலப்பகுதிக்குள் ஒரு நிரபராதி எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அவரது மனைவி, மக்கள், குடும்பம் உறவினர்களுக்கு ஏற்படும் சஞ்சலங்களை இந்நூலில் கற்க முடிந்தது. மட்டுமன்றி, மனக்கண்ணால் பார்க்கவும் புலனுணர்வுகளால் இவ்வேதனைகளை அனுபவிக்கவும் இந்நூல் எனக்குச் சந்தர்ப்பமளித்தது.

டொக்டர் ஷாபியின் அநீதிக்கு எதிரான போராட்டத்தை, கற்பனைகளால் கூட வர்ணிக்க இயலாதுள்ளது. விதியின் விளையாட்டுக்களிலிருந்து எவரும் தப்பிக்க முடியாதென்ற முடிவையும் இந்நூல் எடுத்தாள்கிறது. எனவே, நமக்கான விதிகள் இவ்வாறு விஸ்வரூபமாடாமலிருப்பதற்காக இறைவனை வேண்டியவாறே நாம் வாழப் பழகுவோம்.

தானென்றும் தம் பாடென்றும் வாழாமல், தமது வைத்தியத் தொழிலை மானிடத்துக்காக அர்ப்பணித்த மிகப்பெரிய மானிடவாதி டொக்டர் ஷாபி. துரதிஷ்டவசமாக இனவாதத்தின் நெருக்குவாரங்களுக்குள் கன கச்சிதமாகத் தள்ளப்பட்டிருக்கிறார். எவரதோ திருமண விருந்துக்காக, ஷாபியின் கடா அறுத்துப் பங்கிடப்பட்டதைப் போன்றதொரு சம்பவம்தான் இது. அதிகாரத்தையிழந்திருந்த ஏக்கமும் மீண்டும் அதே அரியணையில் ஏற வேண்டுமென்ற அரச குடும்பமொன்றின் வெறியும் ஈஸ்டர் தாக்குதலின் ஈனச் செயலுக்குப் பின்னாலிருந்த சதியின் நிழலில் டொக்டர் ஷாபியை நகர்த்தி நர வேட்டையாடியிருக்கிறது.

இனவாதம் இல்லாமலாகும் வரை இந்நிலைமைகள் எவருக்கும் ஏற்படலாம். எனவே, இனவாதத்தை இல்லாதொழிக்க சகலரையும் இணையும்படி ஷாபி விடுத்துள்ள அழைப்பில், அவரது தேசப்பற்றுக்கான ஒளிக்கீற்றுக்கள் தென்படுகின்றன. தொழில் மற்றும் நட்பு என்ற அடிப்படையில் ஏற்படும் உறவுகளில், சில விரிசல்களாகவும் முரண்பாடுகளாகவும் மாறுவதுண்டு. இதைச் சிலர் இனவாதத்தில் முதலிட்டு சுயலாபத்தைப் பெருக்கிக்கொள்கின்றனர். டொக்டர் ஷாபிக்கும் இதுதான் நிகழ்ந்தது.

இல்லாததை இருப்பதாகக் காட்டவும் செய்யாததை செய்ததாக நிரூபிக்கவும் குருநாகல் வைத்தியசாலையின் சூழல், டொக்டர் ஷாபியின் எதிரிகளுக்கு தற்காலிகமாகக் கை கொடுத்த கதையைத்தான் இந்நூல் சொல்கிறது. நீதிபதியின் மனைவி இதே வைத்தியசாலையில் பணியாற்றியவர். குருநாகல் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு நெருக்கமான உறவுகள் எனப் பலர், இந்த சூழ்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்ட பாங்கிருக்கிறதே, இதை நினைக்கையில் பீதியால் எம் நெஞ்சங்கள் பிரமையடைந்துவிடும்.

நாலாம் மாடியில், 47 நாட்கள் தடுத்துவைக்கப்பட்டு நடத்தப்பட்ட விசாரணைகளில் டொக்டர் ஷாபிக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் நிரூபணமாகவில்லை. அவரை விடுவிப்பதைத் தவிர வேறு வழிகளில்லை என குற்றப்புலனாய்வுத் துறை கைவிரித்த போதும், மேலும் 14 நாட்கள் கேகாலைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்குமாறு உத்தரவிடப்பட்ட பின்னணியை பகிரங்கமாக எழுத இயலாத நிலையிருக்கிறது.

இது தவிர, இன்னும் ஏராளமானதைக் குறிப்பிட்டுச் சொல்லுமளவுக்கு பல சம்பவங்கள் இந்தச் சதி நாடகத்தில் நிகழ்ந்துள்ளன. எவ்வித குற்றமும் செய்யாத டொக்டர் ஷாபி, நாட்டின் பிரபல கேடிகளுடனும் குற்றவாளிகளுடனும் கைகளில் விலங்கிடப்பட்டு, கோர்வையாக சிறைச்சாலைக்கு இழுத்துச் செல்லப்பட்டார். அவரது மனைவியான இமாறா ஷாபி இதை நேரடியாகக் கண்டு கதிகலங்கிய கட்டத்தையும் இந்நூல் குறிப்பிடாமலில்லை. இத்தனைக்கும் இமாறா ஷாபியும் ஒரு டொக்டர். தன்னிலை மறந்து, சமூகத்தில் தமக்கிருக்கின்ற அந்தஸ்த்தை பொருட்படுத்தாது, படிப்பறிவற்ற பாமரப் பெண்போல நீதிமன்ற வளாகத்தில் ஓவெனக் கதறியழுதார். நிரபராதிக்கு ஏற்பட்ட நிலையை நினைத்ததால் ஏற்பட்ட நிர்க்கதி நிலையே இது.

காண்போரெல்லாம் குற்றவாளியான ஒரு கொடியவளைப்போல நோக்கும் நிலைமையும் வெறுப்புடன் வெறித்துப் பார்க்கும் கோபத்துடனுமேதான், இமாறா ஷாபியை தென்னிலங்கை நோக்கியிருந்தது. இதனால், தன்னை அடையாளம் காட்டிக்கொள்ளாதவாறு சில பொறுப்புக்களைச் சுமக்க நேரிட்டது இமாறாவுக்கு. பிள்ளைகளை வேறு பாடசாலைகளில் சேர்ப்பதற்கு எடுத்த பிரயத்தனங்கள் மிகப் பரிதாபமானவை. மட்டுமல்ல, கொழும்பில் வீடொன்றை வாடகைக்கு எடுப்பதில் ஏற்பட்ட சிரமங்களை படிக்கின்றபோது, தனியாக நின்று ஒரு பெண்ணால் இத்தனையையும் சாதிக்க இயலுமா? என்ற ஆச்சர்யம் எவரையும் ஆட்கொண்டுவிடும்.

ஒரு பத்திரிகையின் பொறுப்பற்ற செய்தி ஏற்படுத்திய சித்துவிளையாட்டாக இதைக் கருத முடியாது. கிரிகெட் வர்ணனையைப் போன்று, அடிக்கடி டொக்டர் ஷாபியின் விவகாரங்களை  ஊதிப் பெருப்பித்த சில ஊடகங்கள், ஒரு தேவைக்காக நாட்டை ஒரு கொதிநிலையில் வைத்திருந்தது. ஒருவகையில், ஊடகங்கள் சமூகத்தில் செலுத்தும் தாக்கத்தையும் இது வெளிப்படுத்துகிறது. மருந்துகளைப் பாதுகாப்பாக வைத்திருக்கும் வெப்பநிலை மற்றும் குளிர்நிலை என்பவற்றின் சாதாரண அறிவையாவது தெரிந்திருப்பதில்லையா?கொத்து றொட்டிக்குள் கர்ப்பத்தடையை ஏற்படுத்தும் மருந்துகளைக் கொட்டுவதாக வந்த வதந்திகளையும் சில ஊடகங்கள் நம்பவைத்துள்ளன. இதனால், பாதுகாப்பான சூழலைத் தேடி டொக்டர் ஷாபியின் குடும்பம் கிழக்கிற்குப் புலம்பெயர்ந்தது.

இது பற்றிக் கூறும் டொக்டர் ஷாபியின் மனைவி இப்படி விவரிக்கிறார். தெற்கில் சந்தேகக் கண்ணோடு நோக்கப்பட்ட எமது குடும்பம் கிழக்கில் சந்தோஷக் கண்ணோடு நோக்கப்பட்டது என்கிறார். சமூகம் ஒன்றின் பாதுகாப்பு, ஒட்டுமொத்தச் செறிவுடன் கூட்டாக வாழும் நிலையிலுள்ளது என்ற அரசியல் யதார்த்தத்தையும் எடுத்துச்சொல்கிறது. எட்டாயிரம் சிங்களப் பெண்களுக்கு கருத்தடை செய்து, சிங்கள சமூகத்தின் இனப்பெருக்கத்தை கருவறுக்கும் நோக்கில் டொக்டர் ஷாபி செயற்பட்டாரென்ற போலிச் சோடனைகள் பெற்றுக்கொண்ட தற்காலிக வெற்றிக்கு, நாட்டில் உள்ள இனவாதம்தான் காரணமென்று இந்நூல் இடித்துச் சொல்கிறது.

# சகல மக்களினதும் நலனுக்காக இயன்ற பணிகளை முன்னெடுப்பேன்

## பிரதேச சபை உறுப்பினர் நயிமுல்லாஹ்





(உக்குவல ஜெலீல்)

சகல இன மக்களின் நலனுக்காக என்னாலியன்ற பணிகளை மேலும் முன்னெடுத்துச்செல்ல எனக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது .. என்று ஐ.ம.ச மாருகொன மானாம்பொட தொகுதி அமைப்பாளரும் ரத்தொட்டை முஸ்லிம் கலாசார செயலாளருமான எம்.நயிமுல்லா ஜேபி தெரிவித்தார்.

நடைபெற்ற உக்குவளை பிரதேசசபைத் தேர்தலில் ஐ.ம.ச. யில் போட்டியிட்டு இப்பிதேசசபைக்குத் தெரிவானது குறித்து தலகொட்டுவ எனமிடத்தில் ஏற்பாடுசெய்த கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு நன்றி தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்த அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்

நடைபெற்ற தேர்தலில் பத்து கட்சிகளின் அபேட்சகர்கள் பலர் போட்டியிட்ட நிலையில் நானும் எனது கட்சி சார்பாக போட்டியிட முன்வந்தேன் என்றாலும் முப்பது வருடகால சமூக விவகாரங்களில் மக்கள் நலன்கருதி தேவையான நான் பல காத்திரமான பணிகளைச் செய்துள்ளதை இங்குள்ளவர்கள் அறிவார்கள் மற்றும் அரசியலில் ஈடுபாட்டுடன் கடந்த தேர்தலில் உக்குவளை பிரதேசசபைக்கு ஐ.ம.ச.யில் போட்டியிட்ட என்னை தெரிவுசெய்தமைக்கு எனது அன்பின் வாக்காள மக்களுக்கு நன்றிகூர கடமைப்ப டட்டுள்ளேன் இச்சந்தர்ப்பத்தில் எனக்குக்கிடைத்த இவ் வாய்ப்பினைக்கொண்டு பிரதேசவாழ் சகல இன மக்களின் நலனுக்காக என்னாலியன்ற பணிகளை மேலும் முன்னெடுத்துச் செல்ல வாய்ப்பு கிடைத்துள்ளது இதற்காக எமது கட்சி மேலிடத்திலிருந்து அதற்காக தேவையான ஆலோசனைக ளைப் பெற்று எம் பிரதேச மக்கள் நலன்கருதி பாரபட்சமின்றி பணிகளை முன்னெடுப்பேன் எனவே எவ்வேளையும் என்னை சந்திக்கலாம்...என்றார்.

# தெஹிவலை கல்கிஸை மாநகர சபைக்கு நான்கு சிறுபான்மை உறுப்பினர்கள்







தெகிவளை கல்கிசை மாநகர சபைக்கு இம்முறை நான்கு சிறுபாண்மை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ள்ளனர். முஸ்லிம்கள் மூவரும் ஒரு தமிழரும் இவ்வாறு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர்.

தேசிய மக்கள் சக்தி சார்பில் மூவரும் சுயேட்சை குழு சார்பில் ஒருவரும் தெரிவாகியுள்ளனர். தேசிய மக்கள் சக்தி சார்பில் முஹம்மத் இன்திகாப், சம்சுதீன் ஜிப்ரி , மற்றும் யாழினி என்ற பெண்ணொருவரும் தெரிவாகி யுள்ளனர்.

இதேவேளை சுயேட்சையாகப் போட்டியிட்ட சமூக நீதிக் கட்சியின் தலைவரும் சட்டக் கல்லூரி சிரேஷ்ட மாணவருமான அம்ஹர் முனீர் தெரிவாகியுள்ளார். முதன்முறையாக சுயேட்சை குழுவொன்றின் சார்பில் இவர் தெரிவாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதேநேரம் தேசிய மக்கள் சக்திக்கு இரண்டு ஆசனங்களை வெற்றி பெறக் காரணமாயிருந்த தேசிய மக்கள் சக்தி பிரமுகரான எம். கே.எம்.நௌபரின் பணி முக்கியமான தென சம்சுதீன் ஜிப்ரி தெரிவித்தார். அவரது இந்தப் பணியை நன்றியுடன் நினைவு கூறுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கையின் முதல் ஹஜ் குழுவை வரவேற்ற தூதுவர் அமீர் அஜ்வத்





இலங்கையின் முதலாவது ஹஜ் யாத்திரிகர் குழுவை சவுதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவர் ஜித்தா விமான நிலையத்தில் வரவேற்றார்

இவ்வாண்டு புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக இலங்கை யிலிருந்து வருகை தந்த முதலாவது யாத்திரிகர் குழு மே மாதம் 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சவுதி அரேபியாவை வந்தடைந்தது.

ஜித்தா மன்னர் அப்துல் அஸீஸ் சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கிய 46 யாத்திரிகர்களைக் கொண்ட இக்குழுவை சவுதி அரேபியாவுக்கான இலங்கைத் தூ துவர் அமீர் அஜ்வத் அவர்களும் ஜித்தாவிலுள்ள பதில் கொன்சல் ஜெனரல் மபூஸா லாபிர் அவர்களும் சிறப்பான வரவேற்பளித்தனர்.

மேற்படி நிகழ்வின் போது புனித ஹஜ் யாத்திரிகர்களுக்கு'ஸம்ஸம்' நீர் மற்றும் 'அஜ்வா' பேரீத்தம்பழம் என்பவற்றை வழங்கி வரவேற்ற தூதுவர் அமீர் அஜ்வத் அவர்கள் அனைத்து ஹாஜிகளுக்கும் தனது மனப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டதுடன் புனித ஹஜ் கடமையின் ஆன்மீக முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார். தொடர்ந்தும் உரையாற்றிய தூதுவர் அவர்கள் , இங்கு வருகை தந்திருக்கின்ற புனித யாத்திரிகர்கள் அனைவரும் தமது ஹஜ் கடமையை சுமுகமான முறையில் பாதுகாப்பாகவும் ஆன்மீக ரீதியான உணர்வுடனும் நிறைவேற்றுவதற்கு அவசியமான அனைத்து வகையான உதவிகள் மற்றும் ஆதரவுகளையும் ரியாதிலுள்ள இலங்கைத் தூதரகம் மற்றும் ஜித்தாவில் உள்ள கொன்சல் ஜெனரல் அலுவலகம் என்பன இணைந்து மேற்கொள்ளும் எனவும் உறுதியளித்தார். மேலும் தூதுவர் அவர்கள், இங்கு வருகை தந்திருக்கின்ற புனித ஹஜ் யாத்திரிகர்கள் அனைவரும் சவுதி அரேபியாவின் ஹஜ் மற்றும் உம்ரா அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள அனைத்து வகையான வழிகாட்டல்களையும் தமது சொந்த பாதுகாப்பு மற்றும் நலன் என்பவற்றை கருத்திற் கொண்டு பேணி நடக்க வேண்டும் எனவும் வேண்டிக் கொண்டார்.

இவ்வாண்டு இலங்கையிலிருந்து மொத்தமாக 3500 புனித ஹஜ் யாத்திரிகர்கள் வருகை தருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஏற்பாடுகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு இலங்கை ஹஜ் குழு, சவுதி அரேபியாவின் ஹஜ் மற்றும் உம்ரா அமைச்சு, நியமிக்கப்பட்ட சவுதி சேவை வழங்குநர்கள் மற்றும் உள்ளூர் பயண ஏற்பாட்டாளர்கள் போன்ற பலரும் இணைந்து செயற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.



திருச்சியில் நடை பெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில், உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய பொன்விழா மாநாட்டு தலைவர் பேராசிரியர் முனைவர் சேமுமு. முகமதலி அவர்களுக்கு கலாபூஷணம் பரீட் இக்பால் பொன்னாடை அணிவித்து கௌரவிப்பதை படத்தில் காணலாம். அருகில் மாநாட்டின் செயலாளரும் ாணப்படுகிறார்.

# ஒக்ஸ்போர்ட்டில் முதுமானி கற்கையை நிறைவு செய்த இம்தியாஸ் பாக்கிர் மாக்காரின் முதல்வர் இன்சாப்



முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் அவர்களினது புத்திரான இன்சாப் பாக்கீர் மாக்கார் ஐக்கிய இராச்சியத்தின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் இராஜதந்திர கற்கையில் (Diplomatic Studies) தனது முதுமானி கற்கையை நிறைவு சய்தார்.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக வளாகத்தில் இன்று (16) நடந்த பட்டமளிப்பு விழாவில் முதுமானி கற்கைக்கான பட்டச் சான்றிதழ் பத்திரம் இவருக்கு வழங்கி வைக்கப்பட்டது.

கற்கையைத் தொடர்ந்த காலப் பிரிவில் ஒக்ஸ்போர்ட் யூனியனில் (Oxford Union) பட்டதாரி அதிகாரியாகவும், இலங்கை சங்கத்தின் தலைவராகவும் இவர் பதவி வகித்துள்ளார். National Youth Model United Nations இன் ஸ்தாபித்த இவர், ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கை அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இளைஞர் பிரதிநிதியாக (Official Youth Delegate of Sri Lanka to the United Nations-2018-2019) கடமையாற்றியுள்ளார்.

இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தின் அரசியல் விவகாரங்களுக்கான ஆலோசகராக பணி புரிந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

# தென்கிழக்கு பல்கலையில் சிங்களமொழி கற்கையை பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு!



(நூருல் ஹுதா உமர்)

தென்கிழக்கு பல்கலைக்கழக பணியாளர் மேம்பாட்டு நிலையமும் தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனமும் (NILET) இணைந்து நடாத்திய சிங்களம் மொழி (இரண்டாவது அதிகாரப்பூர்வ மொழி) கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக் கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் கலை நிகழ்ச்சியும் பலகலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் பீடத்தின் கேட்போர்கூடத்தில் பணியாளர் மேம்பாட்டு நிலையத்தின் பணிப்பாளரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி எச்.எம். நிஜாம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பதில் உபவேந்தர் கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத் கலந்து கொண்டு உரையாற்றியதுடன் சான்றிதழ் களையும் வழங்கி வைத்தார். கற்கை நெறியின் இணைப்பாளர் சிரேஷ்ட உதவி பதிவாளர் எம்.எச். நபாரின் வழிகாட்டலில் இடம்பெற்ற இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பிரதிப் பணிப்பாளர் கயன் பொதுப்பிடிய கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டார்.

விசேட அதிதிகளாக முகாமைத்துவ வர்த்தக பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் ஏ.எம்.எம். முஸ்தபா, பொறியியல் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.ஏ.எல்.ஏ. ஹலிம், இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடத்தின் பீடாதிபதி அஷ் ஷேய்க் எம்.எச்.ஏ. முனாஸ், கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் மற்றும் பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர் ஆகியோர் கலந்து கொண்டதுடன் முன்னிலை அதிதிகளாக தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் கல்வி மற்றும் ஆராய்ச்சி அலுவலர் தேசகீர்த்தி தங்கராஜ் கல்யாணி மற்றும் வளவாலர்கலான ஜெ. ஏ. சனத் ஜயசிங்க, சரோஜா தேவநாயகம், எம். யசோதர்னி ,ஜெ. கல்பணி மற்றும் எஸ்.எம். ஜ/வல்லரியின் உரிமையாளர் எஸ்.எம். றிப்னாஸ், எஸ்.எம்.எம். அப்சார் ஆகியோர் கலந்து கொண்டனர். "அரசகரும மெ- ாழிக் கொள்கை ஊடாக இலங்கை பிரஜைகளுக்கு மகிழ்ச்சிகரமான சேவை " எனும் தொனிப்பொருளின் கீழ் பல்கலைக்கழக ஊழியர்கள் தங்கள் கடமைகளை இலகுவில் ஆற்றும் பொருட்டு தென்கிழக்குப் பல்கலைக்கழகம் தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனமும் இணைந்து இவ்வாறான கற்கை நெறிகளை நடத்தியது குறிப்பிடத்தக்கது.

# அரச உதவியுடன் கஹட்டோவிட்ட வட்டாரம் முழுமையான அபிவிருத்தி

**அத்தனகலை பிரதேச சபை உறுப்பினர் இன்ஷாப்**



கஹட்டோவிட்ட வட்டாரத்தை முன்னேற்றத்துக்கான அனைத்து நடவடிக்கைகளும் அரச உதவியுடன் முன்னெடுக்கப் படுமென பிரதேச சபை உறுப்பினர் இன்ஷாப் தெரிவித்தார்.
கஹட்டோவிட்ட வட்டாரத்தை 1776 வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டிய தேசிய மக்கள் சக்தியின் இன்சாப் மற்றும் ஆதரவாளர்கள் ஏற்பாட்டில் ஓகொடபொளையில் அண்மையில் இடம்பெற்ற கஞ்சி வினியோக நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது கஹட்டோவிட்ட வட்டாரத்தை முன்னேற்றுவதற்காக நாம் வழங்கிய வாக்குறுதிகள் படிப்படியாக நிறைவேற்றப்படும். இதற்காக அனைவரும் முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டதுடன் அனைவருக்கும் நன்றியையும் தெரிவித்துக் கொண்டார்.
இங்கு கருத்து வெளியிட்ட பட்டியல் வேட்பாளர் ஜவாத் கஹட்டோவிட்ட வட்டாரத்தை முன்னேறிய கிராமமாக மாற்றியமைக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவுள்ளதாகவும் அதற்கு அனைவரும் கட்சி பேதமின்றி ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

# பேருவளை பிரதேச சபைக்கு தர்கா நகரிலிருந்து மூன்று முஸ்லிம்கள் தெரிவு





**(பீ.எம். முக்தார்)**

2025 உள்ளூராட்சி மன்ற தேர்தல், பேருவளை பிரதேச சபைக்கு ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் தர்கா நகர் தொகுதியில் பைஸான் நைஸர், வெலிப்பிட்டிய தொகுதியில் பயர் ரியாஸ் மற்றும் மாலேவன தொகுதியில் ரிஸ்வி ஸஷ்ருக் ஆகியோரும் போட்டி யிட்டனர். முறையே பைஸான் நைஸர் 1476 வாக்குகளையும், ரியாஸ் மசூர் (பயர்) 1160 வாக்குளையும், ரிஸ்வி ஸரூக் 1295 வாக்குகளையும் பெற்று பேருவளை பிரதேச சபைக்கு தெரிவாகினார்கள்.
இவர்களை வெற்றிபெறச் செய்த தர்கா நகர் மக்களுக்கு, பேருவளை தேர்தல் தொகுதி ஐக்கிய மக்கள் சக்தி அமைப்பாளர் இப்திகார் ஜமீல், ஐக்கிய மக்கள் சக்தி பிரதிப் பொருளாளர் கலாநிதி ரூமி ஹாசிம் மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அஸ்லம் ஸலீம் ஆகியோர் நன்றியை தெரிவித்துக் கொண்டனர். அத்துடன், பேருவளை பிரதேச சபைக்கு ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் தெரிவானவர்கள் இவர்கள் மாத்திரம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# புத்தளம் மாநகர சபையின் புதிய ஆணையாளரை வரவேற்று கௌரவித்த ஜம்மிய்யா நகரக் கிளை



**(எம்.எச்.எம் சியாஜ்)**

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் நகரக் கிளை உறுப்பினர்களால் புத்தளம் மாநகர சபையின் புதிய ஆணையாளர் நந்தன மஹீபால வெள்ளிக்கிழமை (16) வரவேற்று கௌரவிக்கப்பட்டார்.
இதன்போது புத்தளத்தின் முக்கூட்டு தலைமையின் அவசியம் பற்றியும் ஜம் இய்யாவின் தேவைகள் பற்றியும் கலந்தலோசிக்கப்பட்ட துடன் புத்தளத்தில் நடைபெறும் அனைத்து அபிவிருத்திக்கும் ஜம்இய்யா ஒத்துழைப்பு வழங்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கலாவெவ வட்டாரத்தில் பாஹிம் ஸாலி வெற்றி



**(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)**

இபலோகம பிரதேச சபைக்கு ஐக்கிய தேசிய கட்சி சார்பில் கலாவெவ வட்டாரத்தில் போட்டியிட்ட பாஹிம் சாலி வெற்றிபெற்றுள்ளார்.
கலாவெவ வட்டாரத்தில் உள்ள கிராமங்களை உள்ளடக்கிய பகுதியில் இவர் இபலோகம பிரதேச சபைக்கு ஐக்கிய தேசிய கட்சி சார்பில் போட்டியிட்டு 800 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.
அவரின் வெற்றிக்காக அயராது பாடுபட்ட அனுராதபுரம் மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரகுமான் உள்ளிட்ட அனைத்து மக்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறார்.

# வளப்படுத்தியவர்களுக்கு வாத்சல்ய நன்றி கூறும் மகிழ்ச்சிப் பெருவிழாவும், துஆப் பிரார்த்தனை



**(கே.எ.ஹமீட் )**

நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அட்டாளைச்சேனை ஜும்ஆ பள்ளி வட்டாரத்தில் போட்டியிட்டு வெற்றியீட்டிய அல்ஹாஜ் ஏ.எல்.பாயிஸ் இனால் ஏற்பாடு செய்யப்பட்ட வாக்குகளால்வளப்படுத்தியவர் களுக்கு வாத்சல்ய நன்றி கூறும் மகிழ்ச்சிப் பெருவிழாவும், துஆப் பிரார்த்தனையும் 15ஆம் திகதி நடைபெற்றது.
இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சூரா சபைச் செயலாளர் யூ.எல்.வாஹித், கட்சியின் மாவட்ட செயலாளர் ஏ.சி.சமால்தீன், பிரதேச சபைத் தேர்தலில் வெற்றி பெற்ற உறுப்பினர்களான ஐ.எல்.அஸ்வர் சாலிஹ், ஏ.எஸ்.எம்.உவைஸ், ஏ.சி.நியாஸ், ஏ.கே.அமீர்(தொழிலதிபர்), பட்டியல் வேட்பாளர்கள், கட்சியின் கிளைக்குழுத் தலைவர்கள், செயலாளர்கள், உலமாக்கள், கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள், முக்கியஸ்தர்கள், கட்சியின் போராளிகள், பிரமுகர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# கடும் மழையினால் புத்தளத்தில் அதிகமான உப்பு உற்பத்திகள் பாதிப்பு

**(கற்பிட்டி எம் எச்.எம் சியாஜ்)**

சீரற்ற காலநிலையால் பெய்த கடும் மழையினால் சுமார் 15,000 மெற்றிக் தொன்னுக்கும் அதிகமான உப்பு அறுவடை பாதிக்கப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட உப்பு உற்பத்தி யாளர்கள் தெரிவித்தனர்.
சீரற்ற காலநிலையால் நாடு முழுவதும் நிலவிவரும் கடுமையான உப்பு பற்றாக்குறைக்கு, உப்பு உற்பத்திக்கு தேவையான சூரிய ஒளி போதியளவு கிடைக்காததும், தொடர்ச்சியாக மழை பெய்வதும் இதற்குரிய முக்கிய காரணம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.
நாட்டில் மொத்த உப்பு உற்பத்தியில் புத்தளம் மாவட்டம் சுமார் 60 சதவீதம் பங்களிப்பை வழங்கி வருவதுடன், வெயில்ள காலங்களில் சுமார் 100,000 மெற்றிக் தொன் களுக்கும் அதிகமான உப்பு அறுவடை முன்னெடுக்கப் பட்டுள்ளதாக தனியார் மற்றும் அரச உப்பு உற்பத்தியாளர்களின் தொடர்புடைய துறைகள்



தெரிவிக்கின்றன.
இந்நிலையில், புத்தளம் மாவட்டத்தில், சிறுபோக பருவத்தில் உப்பு அதிக அறுவடைக்கு வழிவகுத்துள்ள நிலையில், நேற்று நேற்று (17) முதல் இன்று வரை தொடர்ச்சியாக பெய்து வந்த கடும் மழை காரணமாக, புத்தளத்தில் உப்பு அறுவடை மீண்டும் தோல்வி யடைந்துள்ளதாக உப்பு உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.
இதனால், தாம் பொருளாதார ரீதியாக கடுமையாக பாதிக்கப் பட்டுள்ளதாகவும் , அதிக கடன் சுமைகளோடு தமது வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்வதாகவும் புத்தளம் உப்பு உற்பத்தியாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# களுத்துறை மாநகரசபைக்கு மு.கா. சார்பில் மூன்று முஸ்லிம்கள் தெரிவு

(பீ.எம்.முக்தார்)

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் களுத்துறை மாநகர சபைக்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் மூன்று முஸ்லிம் உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளனர். தலைமை வேட்பாளர் முன்னாள் நகர பிதா ஆமிர் நஸீர் உட்பட இன்னும் இரு உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

களுத்துறை மஹவத்தை வட்டாரத்தில் போட்டியிட்ட ஆமிர் நஸீர் 985 வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றுள்ளார். குருந்துவத்தை(கருவாத்தோட்டம்) வட்டாரத்தில் போட்டியிட்ட ருசாத் நைஸர் 523 வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டயதோடு, குடா ஹீனேட்டியன்கலை வட்டாரத்தில் போட்டியிட்ட





அன்வர் ஸதாத் 712 வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றுள்ளார்கள். களுத்துறை மாநகர சபைக்கு தனித்து போட்டியிட்ட முஸ்லிம் காங்கிரஸ் முதல் தடவையாக மூன்று உறுப்பினர்களைப் பெற்று சாதனை நிலைநாட்டியுள்ளதாக முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் ஏ.எஸ்.எம். நஸீர் ஹாஜியார் தெரிவித்தார். ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த களுத்துறை வாழ் மக்களுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் இன, மத, மொழி, கட்சி, பிரதேச வேறுபாடுகளின்றி களுத்துறை வாழ் மக்களுக்கு முடியமான சேவைகளைப் நாம் பெற்றுக் கொடுப்போம் என்று உறுப்பினராக தெரிவான ஆமிர் நஸீர் தெரிவித்தார்.

# பலாகல பிரதேச சபைக்கு முஹம்மத் சிராஜ் தெரிவ

(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)

பலாகல பிரதேச சபைக்கு தேசிய மக்கள் சக்தியில் பளளுவெவ வட்டாரத்தில் போட்டியிட்ட முஹம்மது சிராஜ் வெற்றி பெற்றுள்ளார்.

பளளுவெவ, நெல்லியகம மற்றும் திக்கெந்தியாவ ஆகிய கிராம சேவகர் பகுதிகளையும் மையமாக கொண்டு போட்டியிட்டு 699 வாக்குகளைப் பெற்று பலாகல பிரதேச சபைக்கு நேரடியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அவரின் வெற்றிக்காக அயராது உழைத்த அனைவருக்கும் நன்றி தெரிவிக்கும் வகையில் கடந்த (08) நெல்லியகம பள்ளிவாசலுக்கு



விஜயம் செய்து ஜூம்ஆத் தொழுகையின் பின்னர் மக்களை சந்தித்து நன்றிகளை தெரிவித்துக் கொண்டார்.

# வன இலாகாவினால் எல்லைக் கற்கள் போடும் வேலைத்திட்டம் நிறுத்தும்

(எஸ்.எம்.எம்.முர்ஷித்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வன இலாகாவினால் எல்லைக் கற்கள் போடும் வேலைத்திட்டம் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் பிரதி அமைச்சருமான அருண்ஹேமசந்திராவின் நடவடிக்கையினால் உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வன இலாகாவானது தமது எல்லைகளை வரையறை செய்யும் வேலைத் திட்டத்தை கடந்த மாதம் ஆரம்பித்த போது மாவட்ட விவசாயிகள் மற்றும் வன ஜீவிகள் திணைக்களம் ஆகியோருக்கிடையில் முரண்பாட்டு நிலையொன்று தோற்றம் பெற்றிருந்தது.

குறித்த பிரச்சினை தொடர்பில் சுமுகமான தீர்வுக்குச் செல்லும் வரை வன எல்லை நிர்ணயத்தை நிறுத்தும்படி மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் பிரதி அமைச்சருமான அருண்ஹேமசந்திரா கேட்டுக் கொண்டமைக்கு அமைவாக வேலைகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டது.

மீண்டும் ஒரு சில இடங்களில் வனஜீவிகள் திணைக்களம் வேலைகளை ஆரம்பிக்க முயற்சி செய்வதாக மாவட்ட விவசாயிகள் தேசிய மக்கள் சக்தியின் கல்குடா தொகுதி அமைப்பாளர் திலிப்குமாரிடம் முன் வைத்த கோரிக்கையானதுவெளி விவகார வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவருமான அருண் ஹேமசந்திரா அவர்களின் நேரடிக் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதன் பிற்பாடு மறு அறிவித்தல் வரும்வரை வன எல்லை நிர்ணய வேலைகள் அனைத்தையும் நிறுத்தி வைக்கும்படி மாவட்ட அரசாங்க அதிபருக்கு மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் பிரதி அமைச்சருமான அருண்ஹேமசந்திரா கடிதம் மூலம் பணித்துள்ளதுடன் மேலதிக நடவடிக்கைகளை விரைந்து மேற்கொண்டு எல்லைக் கற்கள் போடும் நடவடிக்கைகள் அனைத்தையும் நிறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமைதியான முறையில் வெற்றியைக் கொண்டாடிய பேருவளை நகர சபை சுயேட்சை குழு

(பீ.எம். முக்தார்)

பேருவளை நகரசபை தேர்தலில் ஏழு ஆசனங்களைப் பெற்று வெற்றி பெற்ற சுயேட்சைக்குழு வேட்பாளர்கள் (மோட்டார் சைக்கில் சின்னம்) தமது வெற்றியை கேக் வெட்டி மிக அமைதியான முறையில் கொண்டாடினர்.

சீனங்கோட்டை பெரேரா வீதியில் உள்ள சுயேற்சை குழு தலைமை காரியாலயத்தில் நடைபெற்ற இவ் வைபவத்திற்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் தலைமைவகித்தார்.

அக்கரகொடை வட்டாரத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற தலைமை வேட்பாளர் அஸாம் பளீல், சீனன் கோட்டை வட்டாரத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற இஷாக் மர்ஜான் உட்பட ஏனைய வட்டாரங்களில் வெற்றி பெற்ற உறுப்பினர்கள், வேட்பாளர்கள் பெருமளவிலான ஆதரவாளர்கள் நிகழ்வில் பங்குபற்றியதோடு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டனர்.

சுயேற்சைக்குழுவின் வெற்றிக்காக வாக்களித்த, இரவு பகல் பாராது பாடுபட்ட அனைவருக்கும் இதன் போது முன்னால் எம்.பி மர்ஜான் பளீல் நன்றி தெரிவித்தார். போலிப்பிரச்சாரங்களை தூக்கி வீசி எம் மீது மக்கள் பூரண நம்பிக்கை வைத்து வாக்களித்தனர். மக்களுக்கு நாம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றி எதிர்காலத்தில் சிறப்பான சேவைகளை முன்னெடுப்போம் என்றார்.

நீதியாகவும் நேர்மையாகவும் எவ்வித வேறுபாடுகளுமின்றி பேருவளை மக்களுக்கு உச்ச சேவைகளை நகர சபையினூடாக பெற்றுக்கொடுப்போம். ஏன தலைமை வேட்பாளர் அஸாம் பளீல் மற்றும் இஷாக் மர்ஜான் ஆகியோர் இங்கு குறிப்பிட்ட அதே வேளை முன்னால் எம்.பி. மர்ஜான் பளீல், முன்னால் நகர பிதா மில்பர்கபூர் ஆகியோரின் வழிகாட்டலுடன் மக்களுக்கான பணி செவ்வனே





முன்னெடுக்கப்படும் எனவும் எமது வேலைத்திட்டங்களை சிறப்பாக மேற்கொள்ள மக்களின் முழுமையான ஒத்துழைப்பு அவசியம் என்றும் அஸாம் பளீல் இங்கு மேலும் குறிப்பிட்டிருந்தார்.

# நாவிதன்வெளி பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டம்

(ஏ.எச்.எம்.ஹாரீஸ் -மத்திய முகாம்)

2025ம் ஆண்டிற்கான நாவிதன்வெளி பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டமானது பாராளுமன்ற உறுப்பினரும் பிரதேச ஒருங்கிணைப்பு குழுத் தலைவருமான ஏ.ஆதம்பாவா தலைமையில் அண்மையில் (14) பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமா லெப்பை, நாவிதன்வெளி பிரதேச செயலாளர் ராகுலநாயகி சஜிந்ரன், உதவி பிரதேச செயலாளர் பே. பிரணவஷரூபன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் தி. கிருபைராஜா, நிருவாக கிராம உத்தியோகத்தர் மனோஜ் இந்ரஜித், சமுர்த்தி தலைமையக முகாமையாளர் செ. சிவம் ஆகியோரும் நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பல்வேறு துறைசார் நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள், அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் மற்றும் நாவிதன்வெளி பிரதேச செயலக வெளிக்கள உத்தியோத்தர்களும்






கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நாவிதன்வெளி பிரதேச அபிவிருத்திக்கான விடயங்கள் மற்றும் பிரதேசத்தில் காணப்படும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை பெற்றுக் கொடுத்தல் போன்ற பல விடயங்கள் கலந்தாராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை மாணவர்கள் உயர்கல்வியைத் தொடர வாய்ப்பளித்துள்ள சவுதி பல்கலைக்கழகங்கள்

**பேட்டி கண்டவர்: அஷ்ஷைக் எம்.எச். ஷைஹுத்தீன் மதனி, பணிப்பாளர், அல் ஹிக்மா நிறுவனம், கொழும்பு**

*** புலமைப்பரிசில்கள் ஊடாக 300 மாணவர்களுக்கு உயர்கல்வி வாய்ப்பு**

*** பல்கலைககழகங்களில் நடத்தப்படும் கண்காட்சிகளில் இலங்கையை சவுதிக்கும் உலக நாடுகளுக்கும் அறிமுகப்படுத்த சந்தர்ப்பம்**

சவுதி அரேபியாவிலுள்ள பல்கலைக்கழகங்களில் இலங்கை மாணவர்கள் உயர்கல்வியைத் தொடரவும் பட்டங்கள் பெறவும் சவுதி அளிக்கும் வசதிகள், வாய்ப்புகள் மற்றும் புலமைப் பரிசில்கள் மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்ட கால நட்புறவுகள் குறித்து ரியாத் அல் இமாம் முஹம்மத் பின் சஊத் அல் இஸ்லாமியா பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி கற்று கலாநிதிப் பட்டம் பெற்ற மாவனல்லை, ஹெம்மாதகமையைச் சேர்ந்த அஷ்ஷைக் ரிஸ்மியுடன் மேற்கொள்ளப்பட்ட விஷேட நேர்காணல் இது.

**கேள்வி: அல் இமாம் முஹம்மத் பின் சஊத் அல் இஸ்லாமியா பல்கலைக் கழகத்தில் உயர்கல்வி கற்று கலாநிதிப் பட்டம் பெற்றுள்ள நீங்கள் உங்களைப் பற்றி சுருக்கமாகக் குறிப்பிட முடியுமா?**

**பதில்:** ஆம். ஹெம்மாதகமவைப் பிறப்பிடமாகக் கொண்ட நான் எமதூரின் அல் அஸ்ஹர் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியைக் கற்றேன். அதனைத் தொடர்ந்து அக்குரணை ஜாமிஉர் ரஹ்மானியா அரபுக் கல்லூரியில் இணைந்து அல் குர்ஆனை மனனம் செய்யும் பாக்கியத்தைப் பெற்றுக் கொண்டதோடு, காலி, இப்னு அப்பாஸ் அரபுக் கல்லூரியில் இணைந்து கற்று மௌலவிப் பட்டம் பெற்றேன். அதன் பின்னர் சவுதியின் அல் இமாம் பல்கலைக் கழகத்தில் இணைந்து உயர்கல்வியைக் கற்று இளங்கலை, முதுகலைப் பட்டங்களைப் பெற்றுள்ளேன்.

இதேவேளை அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் முன்னாள் தலைவரும், முன்னாள் பொதுச் செயலாளரும், மகரகம கபூரிய்யா அரபுக் கல்லூரியின் முன்னாள் அதிபரும் முன்னணி சமூக சேவையாளருமான மர்ஹூம் எம்.எம்.ஏ முபாரக் மதனீயின் புதல்வியைத் திருமணம் முடிந்து வாழ்கிறேன்.

**கேள்வி: அல் இமாம் முஹம்மத் பின் சஊத் அல் இஸ்லாமியா பல்கலைக்கழகம் குறித்து கூறுங்கள்?**

**பதில்:** 1953 இல் ஆரம்பிக்கப்பட்ட இப் பல்கலைக்கழகம் ஆரமபம் முதல் சவுதி அரேபிய மாணவர்களுக்கு மாத்திரமல்லாமல் வெளிநாட்டு மாணவர்களுக்கும் உயர் கல்வியை இலவசமாகப் பெற்றுக் கொடுக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தி முன்னெடுத்து வருகிறது. இங்கு உயர்கல்வியைத் தொடர புலமைப் பரிசில்கள் வழங்கப்படுகிறது.

தற்போது இப்பல்கலைக்கழகத்தில் வெவ்வேறு துறைகளிலும் சுமார் 2000 மாணவர்கள் கல்வி பெறுகின்றனர். அவர்களில் குறிப்பிடத்தக்களவில் இலங்கை மாணவர்களும் உள்ளனர்.

இப்பல்கலைக்கழகத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் மாத்திரமல்லாமல் உயர்கல்வியும் சர்வதேச தரத்திலானதாகும். அதன் விளைவாகவே இங்கு உயர்கல்வி பெற்ற மாணவர்கள் பலர், அவரவர் நாட்டில் அமைச்சர்களாகவும் பல்கலைக்கழக உபவேந்தர்களாகவும் பேராசிரியர்களாகவும் பல்கலைக்கழகங்களை உருவாக்கியவர் களாகவும் இருக்கின்றனர். குறிப்பாக இப்பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி பெற்ற பலர் மாலைதீவு நாட்டில் அமைச்சர்களாகவும் உள்ளனர்.


அத்தோடு தலைசிறந்த மார்க்க மேதைகள் உருவாகும் பல்கலைக்கழகமாகவும் திகழும் இப்பல்கலைக்கழகம், இலங்கையின் பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவில் அங்கீகாரம் பெற்றுள்ள வெளிநாட்டு பல்லைக்கழகங்களில் ஒன்றாகவும் விளங்குகிறது.

இப்பல்கலைக்கழகத்தில் கற்று பட்டம் பெற வேண்டும் என்ற ஆசை நீண்ட காலமாக எனக்குள் இருந்தது. இந்தப் பின்னணியில் இலங்கையில் நான் பெற்ற கல்விச் சான்றிதழ்களை அடிப்படையாகக் கொண்டு இப்பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பித்தேன். என்னுடைய தகுதிக்கு ஏற்ப இப்பல்கலையில் உயர்கல்வித் தொடரும் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டேன்.

**கேள்வி: நானும் சவுதி அரேபியாவின் மதீனா இஸ்லாமிய பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி பெற்று பட்டம் பெற்றவன் என்ற வகையில் சவுதியில் பல பல்கலைக்கழகங்கள் இருப்பதை அறிவோம். அந்த வகையில் உயர் கல்விக்காக புலமைப்பரிசில்கள் வழங்கக்கூடிய பல்கலைக்கழகங்கள் யாவை? அந்த பல்கலைக்கழகங்கள் அனைத்திலும் இலங்கை மாணவர்கள் கல்வி கற்கின்றனரா?**

**பதில்:** சவுதியில் நிறைய பல்கலைக்கழகங்கள் உள்ளன. அவற்றில் பலவற்றில் இலங்கை மாணவர்கள் உட்பட வெளிநாட்டு மாணவர்கள் புலமைப்பரிசில் பெற்று உயர்கல்வி பெறுகின்றனர். குறிப்பாக அல் இமாம் பல்கலைக்கழகம், மன்னர் சஊத் பல்கலைக் கழகம், மன்னர் பஹ்த் பல்கலைக்கழகம், அமீரா நூரா பல்கலைக்கழகம், அல் கஸீம் பல்கலைக்கழகம், அல் மஜ்மஆ பல்கலைக் கழகம், மதீனா இஸ்லாமியா பல்கலைக்கழகம், நஜ்ரான் பல்கலைக்கழகம், தாயிப் பல்கலைக் கழகம், தபூக் பல்கலைக்கழகம், மக்கா உம்முல் குரா பல்கலைக்கழகம், ஜித்தா மன்னர் அப்துல் அஸீஸ் பல்கலைக்கழகம், மதீனா தைபா பல்கலைக்கழகம், அப்ஹா பல்கலைக்கழகம், அல் கர்ஜ் பல்கலைக்கழகம் என்பன குறிப்பிடத்தக்கவையாகும்.

இவற்றைவிடவும், இரு புனித பள்ளிவாசல்களான மக்கா ஹரம் ஷரீப் மற்றும் மதீனா மஸ்ஜிதுன் நபவி ஆகிய இரு பள்ளிவாசல்களிலும் உயர்கல்விப் பீடங்கள் அமைக்கப்பட்டு அவற்றிலும் வெளிநாட்டு மாணவர்கள்







உயர்கல்வி பெறக்கூடிய வகையில் புலமைப் பரிசில் வழங்கப்படுகின்றன. இந்த வாய்ப்புக்களின் ஊடாக சவுதியிலுள்ள பல்கலைக்கழகங்களில் இலங்கை மாணவர்கள் சுமார் 300 பேர் தற்போது உயர்கல்வி பெற்றுக் கொண்டுள்ளனர்.

**கேள்வி: சவுதியிலுள்ள பல்கலைக் கழகங்களில் கற்று பெற்றுக்கொள்ளும் பட்டங்களுக்கு உரிய அந்தஸ்து குறித்து குறிப்பிடுவதாயின்?**

**பதில்:** சவுதியிலுள்ள பல்கலைக்கழகங்களில் கற்று பெற்றுக் கொள்ளும் பட்டங்கள் இலங்கையிலும் உலகின் ஏனைய நாடுகளிலும் உள்ள பல்கலைக்கழகங்களின் பட்டங்களுக்குரிய அந்தஸ்தைப் பெற்றவையாக விளங்குகின்றன. குறிப்பாக இந்நாட்டின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, ஏனைய நாடுகளது பல்கலைக்கழகப் பட்டங்களைப் போன்று சவுதியிலுள்ள பல்கலைக்கழகங்களின் பட்டங்களையும் அங்கீகரித்துள்ளன.

அந்த வகையில் சவுதி பல்கலைக்கழகங்களில் கற்று பட்டம் பெற்றவர்கள் பலர் இந்நாட்டில் உயர் பதவிகளைப் பெற்றுள்ளனர். சவுதி பல்லைக்கழகங்களில் கற்று பட்டம் பெற்றவர்கள் உலகின் பல நாடுகளின் பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர்களாக வும், பேராசிரியர்களாகவும் உப வேந்தர்களாகவும் இருக்கின்றனர். அத்தோடு இன்னும் பல்துறைகளிலும் பணியாற்றுகின்றனர்.

**கேள்வி: வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் கற்கும் இந்நாட்டு மாணவர்களில் சிலர், தங்களது செலவுகளுக்கென சிரமங்களுக்கு முகம் கொடுப்பதாகக் கூறப்படுகிறது. அத்தகைய நிலைமை சவுதி பல்கலைக் கழகங்களில் மேற்படிப்பைப் தொடரும் மாணவர்களுக்கும் உள்ளதா?**

**பதில்:** சவுதி அரேபியாவில் உள்ள பல்கலைக்கழகங்களில் பொருளியல், தொழில்நுட்பம், மொழித்துறை, ஷரிஆ, கணனித்துறை, பெற்றோலிய விஞ்ஞானம், வணிகம், உளவியல், ஊடகவியல் உள்ளிட்ட பல துறைகளிலும் உயர்கல்வியைத் தொடர புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன. அந்த வகையில் சவுதியில் உயர்கல்வியைத் தொடர புலமைப்பரிசில் பெற்றுக் கொள்ளும் ஒவ்வொரு மாணவரும் பல வகையான சலுகைகளைப் பெற்றுக் கொள்கின்றனர்.

குறிப்பாக புலமைப் பரிசில் பெற்று பல்கலைக்கழக பிரவேசம் பெற்றது முதல் கல்வியை நிறைவு செய்யும் வரையும் வருடா வருடம் தங்களது சொந்த நாட்டுக்கு சென்று வர இரு வழி விமான டிக்கட்டுகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. தங்குமிட வசதிகள், மருத்துவ வசதி என்பன மாத்திரமல்லாமல் மாணவர்களது கைச்செலவுக்காக மாதாந்தம் கொடுப்பனவுகளும் இலவசமாகப் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன. உயர்கல்வி முற்றிலும் இலவசமாக அளிக்கப்படுகிறது.

அதனால் இப்பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி பெற்று வெளியேறும் அனைத்து மாணவர்களும் என்றும் சவுதிக்கு நன்றிக்கடன் உணர்வோடு செயற்படுகின்றனர். சவுதியின் இந்த அளப்பரிய நற்பணி மக்களால் வெகுவாகப் பாராட்டப்படுகிறது.

**கேள்வி: அது சரி. நீங்கள் கல்வி பெற்ற இப்பல்கலைக்கழகத்தின் இலங்கை மாணவர்கள் வருடாவருடம் இந்நாட்டை சவுதிக்கும் வெளிநாடுகளுக்கும் அறிமுகப்படுத்தும் கண்காட்சிகளை நடத்துகின்றரே?**

**பதில்:** ஆம். நான் கல்வி கற்கும் காலத்திலும் இத்தகைய கண்காட்சிகளை ஏற்பாடு செய்து நடத்தியுள்ளோம். மதநல்லிணக்கம், சகிப்புத் தன்மை, சகவாழ்வு என்பவற்றை ஊக்குவிக்கும் வகையில் பல்கலைக்கழகத்தினால் இக்கண்காட்சி ஏற்பாடு செய்யப்படுகிறது. அதில் இலங்கை மாணவர்களாகிய நாம் எமது நாட்டின் சமய, கலாசார விழுமியங்களையும், மத நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வை வெளிப்படுத்தக்கூடிய நிகழ்வுகளையும் காட்சிப்படுத்துகிறோம். சவுதியிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் ஒத்துழைப்புடன் நாம் ஏற்பாடு செய்யும் இக்கண்காட்சியில் இலங்கையைப் பற்றியும் இந்நாட்டின் பொருளாதாரம், பாரம்பரிய உணவு, ஆடைப் பழக்க வழக்கங்கள், சுற்றுலா தலங்கள் உட்பட பல விடயங்களையும் உள்ளடக்குகின்றோம்.

இலங்கையானது மத்திய கிழக்கில் வாழும் அரேபியர்கள் உட்பட உலக மக்களைக் கவரும் அழகியதோர் சிறிய தீவு நாடாகும். அனைவராலும் வியர்ந்து பார்க்கப்படும் எழில்மிகு இயற்கை வளங்கள் நிறைந்த நாடு. நாலா பக்கமும் கடலும் காடுகளும் விவசாய நிலங்களும் சூழப்பட்டு எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேல் எனக் காட்சியளிக்கிறது. இவற்றையும் இக்கண்காட்சிகளில் சேர்த்துக் கொள்கிறோம். இலங்கையையும் இந்நாட்டின் சமய, கலாசார விழுமியங்களையும் வெளிநாட்டினர் அறிந்து தெரிந்து கொள்ளக் கூடிய வகையில் ஏற்பாடு செய்யப்படும் எமது கண்காட்சி சவுதி அரேபிய மாணவர்கள் உட்பட உலகின் பல நாடுகளது மாணவர்களாலும் வியந்து பாராட்டப்படுகின்றன.

இந்தப் பின்புலத்தில் மத்திய கிழக்கு அரேபியர்களின் குறிப்பாக சவுதி அரேபிய மக்கள் இலங்கையை அறிந்து தெரிந்து கொள்ளவும் இந்நாட்டின் சுற்றுலா பொருளாதார மேம்பாட்டுக்கு பங்களிப்பதற்கும் எமது கண்காட்சி பெரிதும் உதவக்கூடியனவாக அமைகின்றன.

**கேள்வி: இலங்கை மாணவர்களும் தங்கள் நாட்டு பல்கலைககழகங்களில் உயர்கல்வியைத் தொடர புலமைப்பரிசில் வழங்கி ஊக்குவித்து வருகின்ற சவுதிக்கும் இந்நாட்டுக்கும் இடையிலான நட்புறவு தொடர்பில் குறிப்பிடுவதாயின்?**

**பதில்:** இலங்கைக்கும் சவுதி அரேபியாவுக்கும் இடையிலான இராஜதந்திர நட்புறவு ஐம்பது வருடங்களை அண்மையில் நிறைவு செய்துள்ளது. இதுதொடர்பில் இலங்கைக்கான சவுதி அரேபியத் தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானி தலைமையில் விஷேட வைபவம் கூட கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்படிருக்கிறது.

ஆனால் 50 வருடங்களுக்கு முன்பிருந்தே இரு நாடுகளுக்கும் இடையில் நீண்ட கால நட்புறவு நிலவிவருகிறது. இந்தப் பின்னணியில் இலங்கையின் சமூக, பொருளாதார, உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக பல்வேறு உதவி ஒத்துழைப்புகளையும் சவுதி அரேபியா நல்கிவருகிறது.

குறிப்பாக வீதிகள், பாலங்கள் மற்றும் வைத்தியசாலைகள், பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி என்பன மாத்திரமல்லாமல் மனிதாபிமானத்தில் உலகையே வென்ற ஒரு நாடாக விளங்கும் சவுதி தேவைப்படும் சந்தர்ப்பங்களில் எல்லாம் இலங்கைக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கவும் தவறியதில்லை. சுனாமியால் பாதிக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கியது. அத்தோடு நோன்பு காலத்தின் பாவனைக்கென வருடாவருடம் தொன் கணக்கில் பேரீச்சம் பழம் வழங்கப்படுதல், விழிவெண்படல சத்திர சிகிச்சை உள்ளிட்ட கண் சிகிச்சை முகாம்கள் இலவசமாக நடத்துதல், குர்ஆன் மனனப் போட்டிகளை தேசிய மட்டத்தில் நடத்தப்படுதல் அவற்றில் குறிப்பிடத்தக்கவையாகும்.

**கேள்வி: அமைதி, சமாதானம், நல்லிணக்கம் மற்றும் பயங்கரவாத ஒழிப்பு போன்றவற்றை ஊக்குவிப்பதில் எப்பொழுதும் முன்னணியில் நிற்கும் நாடுகளில் ஒன்றான சவுதியில் நீண்ட காலம் கல்வி கற்று பட்டம் பெற்ற நீங்கள் அவை தொடர்பில் சுருக்கமாகக் குறிப்பிட முடியுமா?**

**பதில்:** நிச்சயமாக. சவுதியின் அடிப்படைக் கொள்கையே அமைதி, சமாதானம், நல்லிணக்கம் மற்றும் சகிப்புத் தன்மையாகும். அதற்காக பல மாநாடுகளையும் கருத்தரங்கு களையும் சவுதியிலும் வெளிநாடுகளிலும் நடத்தி வருகிறது. அத்தோடு இத்தகைய மாநாடுகளும் கருத்தரங்குகளும் சவுதியின் பல்கலைகழகங்களிலும் கூட அடிக்கடி நடத்தப்படுகிறது. சவுதி இஸ்லாமிய விவகார அமைச்சின் முக்கிய பணிகளில் அதுவும் ஒன்றாகும்.

இதேவேளை பயங்கரவாதத்திற்கும் தீவிரவாதத்திற்கும் சவுதியில் அணுவளவுகூட இடம் கிடையாது. இஸ்லாத்தின் கொள்கையும் அதுவேயாகும். அதனால் பயங்கரவாதத்தையும் தீவிரவாதத்தையும் கட்டுப்படுத்தி ஒழித்துக் கட்டுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எல்லா மட்டங்களிலும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பயங்கரவாதத்தினதும் தீவிரவாதத்தினதும் தீங்குகள், பாதிப்புக்கள், தாக்கங்கள், அழிவுகளை தெளிவுபடுத்தி அறிவூட்டவென மாநாடுகளும் கருத்தரங்குகளும் மாத்திர மல்லாமல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றன. அதன் பயனாகவே பயங்கரவாதம் ஒழிக்கப்பட்ட நாடாக சவுதி விளங்குகிறது. அமைதி, சமாதானம், நல்லிணக்கம் தலைத்தோங்கும் நாடாகத் திகழுகிறது சவுதி. அத்தோடு இன, மத, நாடு வேறுபாடுகளின்றி தேவைகள் மிக்க நாடுகளுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதிலும் முன்னணி மிக்க தேசமாகவும் திகழுகிறது சவுதி. தற்போது இடம்பெறும் யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள பலஸ்தீன மக்களுக்கும் மனிதாபிமான உதவிகளை வழங்குவதில் அதிசிரத்தை எடுத்துக் கொண்ட நாடாகவும் சவுதி உள்ளது.

**கேள்வி: நிறைவாக நீங்கள் கூற விரும்புவதென்ன?**

**பதில்:** சவுதி அரேபியாவிலுள்ள பல்கலைக் கழகங்களில் உயர்கல்வியைத் தொடர அளிக்க ப்பட்டுள்ள வாய்ப்புக்களை பயன்படுத்திக் கொள்வதில் இந்நாட்டு மாணவர்கள் கூடுதல் ஆர்வமும் அக்கரையும் காட்ட வேண்டும். அது அவர்களுக்கும் கல்வி மேம்பாட்டுக்கும் அளிக்கும் பாரிய பங்களிப்பாக அமையும். அதேநேரம் பேட்டி காணும் நீங்கள் உட்பட இந்நாட்டைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானவர்கள் சவுதி பல்கலைக்கழகங்களில் ஏற்கனவே உயர்கல்வி பெற்றுள்ளனர். நான், நீங்கள் உட்பட அனைவரும் இதற்கான வாய்ப்பைப் பெற்றுத் தந்த தாய்நாட்டுக்கும் சவுதிக்கும் என்றும் நன்றிக்கடன்பட்டவர்களாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம். குறிப்பாக சவுதி அரேபியாவை ஆட்சி செய்த மன்னர்கள் உலக மக்களுக்கு உயர்கல்வி பெற வாய்ப்பளித்தது போன்று தற்போதைய இரு புனித பள்ளிவாசல்களின் பாதுகாவலரும் சவுதி அரேபிய மன்னருமான சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் சஊத், சவுதி இளவரசரும் பிரதமருமான முஹம்மத் பின் சல்மான் ஆகிய இருவரும் கூட இம்மகத்தான பணிகளை தொடர்ந்தும் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் என்றும் நன்றி கூறக் கடமைப்பட்டவர்களாவர். அவர்களது மக்களுக்கான மகத்தான பணிகள் என்றும் நீடிக்க இறைவனைப் பிரார்த்திப்போம்.



# உள்ளூராட்சி தேர்தல் முடிவுகளும் அரசியல் நெருக்கடி நிலையும்



எம்.எஸ். அமீர் ஹுசைன்

2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடக்க விருந்து பின்போடப்பட்ட மாநகர சபைகள் 28, நகர சபைகள் 36 மற்றும் பிரதேச சபைகள் 272 ஆகியவவை உள்ளடங்களாக 336 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடைபெற்று முடிவுகளும் வெளியாகி இருக்கின்றன.

போட்டியிட்ட அரசியல் கட்சிகளில் பிரதானமாக ஆளும் தேசிய மக்கள் சக்திக்கு கணிசமான பின்னடைவை தந்த தேர்தலாக அமைவதை அவதானிக்க முடிகின்றது. ஆனாலும் எடுத்த எடுப்புக்கே பின்னடைவு என்பதைவிட ஆளும் கட்சிக்கு மக்கள் எச்சரிக்கை மணி அடித்துள்ளார்கள் என்றே சொல்ல வேண்டும். ஏற்கனவே 2024 ஆம் ஆண்டு நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களின் படுதோள்விகளை சந்தித்த கட்சிகள் ஒருவாறு மீண்டும் எழுந்து நிற்கலாம் என்ற தன்னம்பிக்கையை பெறும் வகையிலான முடிவுகளும் வெளியாகி இருக்கின்றன. அத்துடன் தேசிய மக்கள் சக்தி கொழும்பு மாநகர சபை உட்பட பிரதானமான சபைகளில் அதிகாரத்தை தக்கவைக்க முடியாத அளவுக்கு சவால்களை சந்தித்திது வருகின்றது.

இந்த தேர்தலில் போட்டியிடுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட 107 அரசியல் கட்சிகளில் 49 கட்சிகளில் இருந்தும் 257 சுயேட்சை குழுக்களில் இருந்தும் 75,589 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இவர்களில் இருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் எண்ணிக்கை 8,287 ஆகும். பிரதான அரசியல் கடசிகள் வரிசையில் ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்தி, பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீ.ல.சு. கட்சி கூட்டணி, சர்வஜன சந்த பலய, ஐ.தே. கட்சி, கிழக்கில் ஸ்ரீ.ல.மு.கா. கட்சி, ரிசாட் அணி, அதாஉல்லாஹ் அணி என்று சில முஸ்லிம் கட்சிகள், வடக்கில் தமிழ் அரசுக் கட்சி உட்பட பல கட்சிகள் போட்டியிட்டாலும் இவற்றில் ஒருசில கட்சிகளே தமது அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ளும் அளவிற்கு மக்கள் மத்தியில் இந்த தேர்தலில் செல்வாக்கை பெற்றிருந்தன.

தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் பார்த்தால் மொத்த சபைகளில் 227 சபைகளில் தேசிய மக்கள் சக்தியான ஆளும் கட்சி வெற்றிபெற்றாலும் 120 சபைகளில் அதிகாரத்தை பெற முடியாத அளவிற்கு எதமிர்க்கட்சிகள் கூட்டாக முன்னணியில் இருக்கின்றன. தேசிய மக்கள சக்தி 265 சபைகளில் 3927 உறுப்பினர்களை பெற்றிருக்கின்றது. ஆனாலும் 127 சபைகளில் தேசிய மக்கள சக்தி உட்பட ஏனைய கட்சிகளின் கூட்டு தேசிய மக்கள் சக்தி பெற்றுள்ள ஆசனங்களைவிட அதிக ஆசனங்களை பெற்றுள்ளன. இந்த சபைகளில் என்.பி.பி. ஏனைய சிறிய கட்சிகளது அல்லது சுயேட்சை குழுக்களின் ஆதரவுடன் தான் ஆட்சியமைக்க முடியும். அவ்வாறே 120 சபைகளில் எதிரனி கூடுதல் ஆசன பலத்தை பெற்றிருப்பதால் அந்த சபைகளின் அதிகாரத்தை இழக்க வேுண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றன. அதிலும் கொழும்பு நாகர சபை பிரதான சபையாக அமைகின்றது. இந்த சபைக்கான உறுப்பினர் 117 மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் தேசிய மக்கள் சக்தி 48 உறுப்பினர் களை மாத்திரமே பெற்றிருப்பதால் மேயர் உட்பட அதிகாரத்தை பெற முடியாது. அவ்வாறு பெறுவதாக இருந்தால் சிறிய கட்சிகளான ஸ்ரீ.ல.மு.கா, சர்வஜன பலய மற்றும் சுயேட்சைக் குழுக்களின் ஆதரவை பெற வேண்டும். அதே நேரம் எதிரணி கட்சிகள் 69 ஆசனங்களை பெற்றிருக்கின்றன. இவ்வாறுதான் ஏனைய பிரதேசங் களிலும் ஆளும் கட்சியான அநுரகுமார திசாநாயக்கா தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் நிலை இருக்கின்றது.

இப்படி பார்க்கின்றபோது ஐக்கிய மக்கள் சக்தியான சஜித் தலைமை யிலான சஜப 14 சபைகளில் அதிகாரத்தை பெற்று மொத்தம் 1767 உறுப்பினர்களை பெற்றிரு க்கின்றது. ஐந்து வருடங்களின் பின்னர் மீண்டும் யானை சின்னத்தில் போட்டியிட்ட ஐ.தே.க. 01 சபையை பெற்றிருப்ப தோடு மொத்தம் 106 உறுப்பி னர்களை எல்லா சபைகளிலும் பெற்றிருக்கின்றது. இதில் வடக்கு கிழக்கில் மீண்டும் இலங்கை தமிழரசுக் கட்சி மக்களின் ஆதரவை பெற்று 35 சபைகளின் அதிகாரத்தை



பிடித்திருப்பதோடு 377 உறுப்பினர்க ளையும் பெற்றுக்கொண்டிருக்கின்றது. அத்துடன் கிழக்கில் ஸ்ரீ.ல.மு. காங்கிரஸ் கட்சி 06 சபைகளில் செல் வாக்கை பெற்று 116 உறுப்பினர்களை பெற்றிருக் கின்றது. அத்துடன் ரிசாட் பதியுத்தீன் அணியும் 03 சபைகளில் அதிகாரத்தை பெற்றிருப்பதோடு 60 உறுப்பினர்களை பெற்றிருக்கின்றது. மலையகத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சி 02 சபைகளை பெற்று 54 உறுப்பினர்களை பெற்றிருக்கின்றது. சர்வஜன பலய என்ற திலித் ஜயவீரவின் கட்சி 227 உறுப்பினர்களை பெற்றி ருக்கின்றது. வடக்கில் தமிழரசுக் கட்சி நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் 257,813 வாக்குகளையும் கிழக்கை பிரதானமாகக் கொண்டு தனித்து போட்டியிட்ட ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் கட்சி 87,038 வாக்குகள் என்ற அடிப்படையிலும் பாரிய பின்னடைவுகளை சந்திக்க நேரிட்டன. எதிர்பாராத விதமாக 2024 ஜனாதிபதித் தேர்தலிலும் அதன் பின்னர் பொதுத் தேர்தலிலும் தேசிய மக்கள் சக்தி எழுச்சி கண்டதால் ஏற்பட்ட அரசியல் மாற்றமே மரபு ரீதியாக செல்வாக்குப் பெற்றிருந்த கட்சிகள் வீழ்ச்சி காண அடிப்படை காரணமாக அமைந்தது எனலாம். 2024 நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி மொத்தமாக 6,863,186 வாக்குகளை பெற்றுக் கொண்டது. அக்கட்சி 2024 ஜனாதிபதித் தேர்தலில் பெற்றுக்கொண்ட வாக்குகள் 5,634,915 ஆகும். ஆனால் பொதுத் தேர்தலில் ஜனாதிபதித் தேர்தலை விட மேலும் 12 இலட்சத்திற்கும் அதிகமான வாக்குகளை பெற்று மேலும் மக்கள் ஆதரவை பலப்படுத்திக்கொண்டது. ஆனாலும் இந்த தேர்தல் முடிவுகள் தேசிய மக்கள் சக்திக்கு வேதனையை கொடுத்திருக்கும் என்றே கருத முடிகின்றது. ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களில் பெற்றுக்கொண்ட வாக்கு பலம் சராசரியாக 23 இலட்சம் அளவால் குறைவடைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.தேசிய மகள் சக்தி 2024 பொதுத் தேர்தலில் பெற்றுக்கொண்ட வாக்குகள் 6,863,183 அகும். ஆனால் இம்முறை உள்ளூராட்சி சபை தேர்தலில் பெற்றுக்கொண்ட வாக்குகள் 4,503,930 ஆகும். நாட்டில் அதிகமான உள்ளூராட்சி மன்றங்களை கைப்பபற்றி இருந்தாலும் நாடளாவிய ரீதியில் வாக்குப்பலம் சரிவடைந்து இருக்கின்றது. அதே நேரம் ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசிய கட்சி, பொதுஜன பெரமுன வடக்கில் தமிழரசுக் கட்சி உட்பட சில கட்சிகள் ஓரளவுக்கு அதன் வாக்குப் பலத்தை அதிகரித்துக் கொள்ள முடிந்திருக்கின்றன. அத்துடன் பொதுஜன பெரமுன கட்சி பொதுத் தேர்தலில் பெற்றுக் கொண்ட வாக்குகள் 350,429 ஆகும். ஆனாலும் இந்த தேர்த லில் 954,517 வாக்குகளைப் பெற்றிருக்கின்றது. சர்வஜன பலய என்ற திலிப் ஜயவீரவின் கட்சியும் 178,006 வாக்குகளில் இருந்து 294,681 என்ற அளவிற்கு செல்வாகு அதிகரிக்க ஆரம்பித்திருக்கின்றது. ஆனாலும் ஐ.தே.கட்சியின் நிலையில் குறிப்பிட த்தக்க மாற்றம் ஏற்படவில்லை.

அதிலும் தற்போதைய நிலையில் கொழும்பு மாநகர சபை உட்பட சில மாநகர, நகர மற்றும் பிரதேச சபைகளில் தேசிய மக்ள சக்தி வெற்றிபெற்றிருந்தாலும் அதிகாரத்தை பெறும் அளவிற்கு பெரும்பான்மை அல்லது 50 வீதத்திற்கு அதிகமான உறுப்பினர்களை பெறவில்லை. அதனால் எதிர்க்கட்சியாக இருக்கின்ற ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசிய கட்சி பொதுஜன பெரமுன, ஸ்ரீ.ல.சு. கட்சியின் கூட்டணி மற்றும் சர்வஜன பலய போன்ற கட்சிகளின் ஒத்துழைப்புடன் சபைகளை அமைக்கும் நிலை ஏற்பட்டிருக்கின்றது. அதனால் தற்போதைய நிலையில் இந்த கட்சிகளின் தலைமைகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

இவ்விடயம் தொடர்பாக பொதுஜனபெரமுன கட்சியின் தலைவர் நாமல் ராஜபக்ஷ ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக் ககயில் ஐக்கிய மக்கள் சக்தி முன்வருமானால் பேச்சுவார்த்தை நடத்தி ஒத்துழைக்க தயாராக இருப்பதாக குறிப்பிட்டார். ஐ.தே. கட்சியின் பொதுச் செயலாளர் தலதா அதுகோரளை கருத்து தெரிவிக்கையில் சஜித் இதுவரையில் பேசவில்லை என்றும் இயலுமான ஒத்துழைப்பை வழங்க தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

ஆனாலும் தேசிய மக்கள் சக்திக்கும் இத்தகைய சபைகளின் அதிகாரத்தை பிடிக்க வேண்டுமானால் இதே கட்சிகளின் உதவி தேவைப்படுகின்றது. ஆனாலும் எவ்வாறு அதற்காக பேச்சுவார்த்தை நடத்துவது என்ற இரண்டும் கெட்டான் நிலை உருவாகி இருக்கின்றது. அது தொடர்பாக கட்சியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா 2025.05.06 ஆம் திகதி ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் திருடர்களைக் கொண்ட கட்சிகளுடன் கூட்டுச் சேர மாட்டோம். சுயேட்சைக் குழுக்கள் வந்தால் சேர்த்து அதிகாரம் பெற முடியாத சபைகளில் ஆட்சி அமைக்க முயற்சி எடுப்போம் என்று தெரிவிக்கின்றார். காரணம் நாட்டில் அனைத்து கட்சிகளிலும் இருப்பவர்கள், திருடர்கள், ஊழல் செய்தவர்கள், நாட்டை சுரண்டியவர்கள் என்றெல்லாம் கடந்த ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் உட்பட இந்த தேர்தலிலும் சொல்லி வந்திருப்பதால் எந்த வகையிலும் இத்தகைய கட்சிகளுடன் தேசிய மக்கள் சக்தி இணைந்து கூட்டணி அமைக்க முடியாது. எந்த முகத்துடன் இவர்கள் ஏனைய கட்சிகளுடன் அதிகாரத்திற்காக பேச்சுவார்த்தை நடத்துவது என்று சிந்திக்க வெுண்டி இருக்கின்றது.

அதுமட்டுமல்லாமல் தேர்தல் முடிவுகள் இந்த தேசிய சக்திக்கு தெளிவான வெற்றியை வழங்கவில்லை என்ற நிலையில் தற்போது இருக்கின்ற மக்ள ஆதரவும் ஏதோ ஒருவகையில் பொறுத்து பார்ப்போம் என்ற அடிப்படையிலான ஆதரவாகும். ஆட்சி அமைக்க முடியாத 149 உள்ளூராட்சி சபைகளில் அதிகாரத்தை பெற என்.பி.பி. சஜப, ஐ.தே.க, பொதுஜன பெரமுன, ஸ்ரீ.ல.சு.கட்சி தலைமையிலான கூட்டணி, ஸ்ரீ.ல.மு.கங்கிரஸ் கட்சி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் போன்ற கட்சிகளது ஆதரவை பெற வேண்டும். ஆனாலும் அதற்கு எந்தவகையிலும் தயாராக இல்லாத நிலையில் எதிரணிக்கு விட்டுக் கொடுப்பதே ஒரே வழி என்ற நிலைக்கு ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்தி தள்ளப்பட்டிருக்கின்றது. மறுபுரமாக இவ்வாறாக 149 மன்றங்களிலும் சஜித் பிரேமதாசா தலைமையிலான பிரதான எதிர்க் கட்சி ஏனைய சிறிய கட்சிகளுடன் அல்லது சுயேட்சை குழுக்களுடன் சேர்ந்து அவை பெற்றுள்ள உறுப்பினர்களது ஆதரவுடன் அதிகாரத்தை பெற்றாலும் மேயர், பிரதி மேயர், நகரர சபை தலைவர் போன்ற பதவிகளுக்கான கடும் போட்டி இருந்து வருகின்றது. இப்போதே கொழும்பு மாநகர சபையின் மேயர் பதவிக்கான போட்டியில் சஜித் தின் ஐக்கிய மக்ள சக்தி மும்முரமாக இருக்கின்றது. இந்நிலையில் தேசிய மக்கள் சக்தியை தவிர ஏனைய அனைத்து கட்சிகளும் அரசாங்கத்தை தோற்கடித்து பாடம் புகட்ட வேண்டும் என்ற ஒரே நிலைப்பாட்டில் கூட்டணி சேர்ந்து ஆதரவுடன் மேற்படி 149 சபைகளிலும் அதிகாரத்தை அமைத்து தேசிய மக்கள் சக்தியின் அதிகாரத்தை தடுக்கும் முயற்சியில் இறங்கினாலும் அவை எவ்வளவு காலத்திற்கு சிக்கல்கள் இல்லாமல் தொடர்ந்து போகும் என்ற கேள்விகளும் எழுகின்றன.

ஆதரவு வழங்கும் சிறிய கட்சிகள், அணிகளுக்கும் சஜப க்கும் அல்லது பொதுஜன பெரமுன கட்சிக்கும் இடையிலான முறண்பாடுகள் ஏற்பட்டால் மீண்டும் சபையை கலைக்க வேண்டிய நிலை ஏற்படலாம். அந்த சந்தர்ப்பத்தில் குறைந்த உறுப்பினர்கள் பலத்துடன் இருக்கும் தேசிய மக்கள் சக்திக்குத் தான் வாய்ப்பு கிடைக்கும் நிலை இருக்கின்றது. இவ்வாறு பார்க்கின்ற போது அரசாங்கம் கடந்த 08 மாதங்களில் வெறும் வாய்ப்பேச்சிலும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக் காவினதும் டில்வின் சில்வாவினதும் பிரச்சார பீரங்கி பலத்திலே தான் கடந்து வந்ததே தவிர பிரதிபலன் தரக்கூடிய செயற் திட்டங்களை முன் வைக்கவில்லை. வெறும் திருடர்கள், ஊழல் என்ற கதைகளை நம்பி மக்கள் தொடர்ந்தும் ஏமாற மாட்டார்கள் என்ற செய்தியை அரசுக்கு இந்த தேர்தல் முடிவுகள் தெளிவாக சொல்லி இருக்கின்றன. தற்போது ஏற்பட்டுள்ள 23 இலட்சம் மக்களது ஆதரவு வீழ்ச்சிக்கு என்ன நடந்தது என்ற கேள்விக்கு அரசு விடை காண வேண்டி இருக்கின்றது. இவர்கள் யார், ஏன் தேசிய மக்கள் சக்திக்கு இம்முறை வாக்களிக்கவில்லை என்றெல்லாம் அரசு உயர் மட்டத்தில் சிந்தித்து குறைகளை சரிசெய்து போக்கில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டி இருக்கின்றது. அதுமட்டு மல்லாமல் சஜப மற்றும் பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகள் படிப்படியாக மேல் எழுந்து வருவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

தேசிய மக்கள் சக்தி கடந்த காலங்களில் இக்கட்சிகளது வாக்குப் பலத்தை உடைத்து சிதறடிப்பதற்கான அனைத்து தந்திரோபாயங்களையும் செய்து வந்திருக்கின்றது. அதன் மூலமே குறுகிய காலப்பகுதிக்குள் பாராளுமன்றத்தில் 158 ஆசன பலத்தை பெற முடிந்தது. ஆனாலும் இதன் பிறகு அந்த வாய்ப்பு படிப்படியாக சரிவடைய ஆரம்பிக்கின்றது என்ற எச்சரிக்கையை இந்த தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தி வருகின்றது என்பதை குறிப்பிடலாம். 23 இலட்சம் வாக்காளர்களது ஆதரவு மிகக் குறுகிய காலப்பகுதிக்குள் இல்லாமல் போகும் அளவிற்கு வழிவகுத்த காரணிகள் யாவை என்பது தொடர்பாக ஆளும் கட்சியான அரசாங்கம் சிந்திக்க வேுண்டி இருக்கின்றது. அவ்வாறாயின் மக்கள் ஆதரவை தக்கவைப்பதற்கான ஆளும் கட்சியின் அடுத்த கட்ட நகர்வும் திட்டங்களும் எவ்வாறு அமையும் என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

# பாலஸ்தீனர்களுக்கு நெருக்கடி கொடுக்கும் காஸா சூனியப் பிரதேசம்



எம்.ஐ.அப்துல் நஸார்

காஸாவின் தெற்கு நகரமான ரபாவை துண்டித்து, அப் பிரதேசத்தை பல பகுதிகளாகப் பிரிக்கும் மற்றுமொரு இராணுவ நடவடிக்கையினை பூர்த்தி செய்துள்ளதாக இஸ்ரேல் கடந்த வார இறுதியில் அறிவித்தது.

காஸா பகுதியில் இஸ்ரேல் தொடர்ந்து தனது இராணுவ நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகிறது. இதன காரணமாக, குண்டுவீச்சுகள் தொடரும் அதே வேளை, காசாவின் 2.3 மில்லியன் மக்களில் அதிகமானோர் எப்போதும் மிகவும் சன நெரிசலுக்குள் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை, இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ், தெற்கு காசா பகுதியில் இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகள் பெரிய நிலப்பரப்பைக் கைப்பற்றிய தாகக் தெரிவித்தார்.

ரபா மற்றும் கான் யூனிஸ் இடையே காஸாவைக் கடக்கும் மொராக் பகுதிய இஸ்ரேலிய பாதுகாப்புப் படை தற்போது கையகப்படுத்தி யுள்ளது, இது பிலடெல்பியா மற்றும் மொராக்கிற்கும் இடையிலான முழுப் பகுதியையும் இஸ்ரேலிய பாதுகாப்பு வலயத்தின் ஒரு பகுதியாக மாற்றுகிறது' என்று காட்ஸ் அறிக்கையொன்றில் தெரிவித்தார்.

எக்ஸ் தளத்தில் அவர் இட்ட பதிவில் 'காசா சிறியதாகவும் தனிமைப்படுத்தப்பட்டதாகவும் மாறும், மேலும் அதன் குடியிருப்பாளர்களில் அதிக மானோர் சண்டை நடக்கும் பகுதிகளிலிருந்து வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்படும்' என அவர் மேலும் தெரிவித்தார்.

யுத்தத்தை நிறுத்துவதற்கு ஹமாஸை அகற்ற வேண்டும்' என பாலஸ்தீனர்களை அவர் வலியுறுத்தினார்.

இஸ்ரேலிய அரசாங்கம் அதன் தாக்குதலை தீவிரப்படுத்தவும், காஸாவின் பெரும்பகுதியைக் கைப்பற்றவும் உறுதிபூண்டிருந்தது. பல நாடுகளால் பயங்கரவாதக் குழுவாக பெயரிடப்பட்டுள்ள ஹமாஸ், மீதமுள்ள 59 பணயக் கைதிகளை விடுவிக்கவும், அவர்களில் 24 பேர் உயிருடன் இருப்பதாக நம்பப்படும் புதிய போர்நிறுத்த விதிமுறைகளை ஏற்றுக்கொள்ளவும் அழுத்தம் கொடுத்துள்ளது.

**பாதிக்கப்படும் பொதுமக்கள்**

மீண்டும், காசாவின் பொதுமக்கள் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றனர். யுத்தத்திற்கு முன்னர், காஸாவின் தென் பகுதியிலுள்ள உள்ள ரபா ஆளுநர் பிரதேசத்தில் சுமார் 200,000 பேர் வசித்து வந்தனர்.

ஜனவரி மாதம் தற்காலிக யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்த பின்னர் அப்துல் ரஹ்மான் தாஹா ரபாவில் உள்ள தனது பகுதிக்குத் திரும்பிய போது, 'வீட்டின் ஒரு சிறிய பகுதி மட்டுமே எஞ்சியிருப்பதைக் கண்டார்' அந்தக் குடும்பம் அவர்களின் முந்தைய வீட்டின் இடிபாடுகளுக்குள் தங்கியிருந்தது. ஏப்ரல் மாத ஆரம்பத்தில், இஸ்ரேலிய இராணுவம் குடியிருப்பாளர்களுக்கு இடமாற்ற உத்தரவுகளை பிறப்பித்தது, மேலும் தாஹாவுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் மீண்டும் வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

ரபா கிட்டத்தட்ட முழுமையாக அழிக்கப்பட்டுள்ளது. மிகக் குறைந்த வீடுகளே எஞ்சியுள்ளன. தெருக்கள் ஏற்கனவே இடிந்து போயுள்ளன, அவை மீண்டும் கட்டப்பட வேண்டும். தற்போது அவர்கள் தேவை முடிந்த பின்னர் மீதமுள்ளவற்றை அழிக்கப் போகிறார்கள்,' என்று தாஹா கூறினார், அவர் தற்போது போது கான் யூனிஸில் ஒரு கூடாரத்தில் மிகவும் சிரமத்திற்கு மத்தியில் வசித்து வருகிறார்.

மார்ச் மாத ஆரம்பத்தில் யுத்த நிறுத்தத்தின் முதல் கட்டம் முடிவடைந்ததன் பின்னர், இஸ்ரேலிய அரசாங்கம் காஸாவிற்கு எரிபொருள், உணவு, வர்த்தக மற்றும் மனிதாபிமான விநியோகங் களை நிறுத்தியது. 'யுத்தம் ஆரம்பமானதிலிருந்து 18 மாதங்களில் இல்லாத அளவுக்கு மனிதாபிமான நிலைமை தற்போது மிக மோசமாக இருக்கலாம்' என்று ஐக்கிய நாடுகள் சபை திங்களன்று எச்சரித்தது.

'யுத்தம் முடிந்துவிட்டது என்று நாங்கள் நினைத்தோம் ஆனால், அது பழிவாங்கலுடன் மீள ஆரம்பமாகியுள்ளது, 24 மணி நேரமும் இடைவிடாமல் இரத்தம் சிந்தப்படுகின்றது,' என் அபூ தாஹா தெரிவித்தார். ' தொடர்ந்தும் குழப்ப நிலை காணப்படுகின்றது. உள்நாட்டு பாதுகாப்பு நிலைமை மோசமடையத் தொடங்குகிறது. இது ஒரு பயங்கரமான உணர்வினை ஏற்படுத்தியுள்ளது.' எனவும் அவர் தெரிவித்தார்.

**மார்ச் மாதத்தில் இஸ்ரேலிய இராணுவம் தாக்கும்போது பாலஸ்தீன மக்கள் ரபாவிலிருந்து கான் யூனிஸுக்கு ஓடினார்கள்**

51 வயதான பாலஸ்தீனர் ஒருவர் தனது சொந்த ஊர் தற்போது ஒரு 'பாதுகாப்பு சூனிய வலயத்தின்' ஒரு பகுதியாக மாறிவிட்டதாக கவலைப்படுகிறார். புதிதாக உருவாக்கப்பட்ட மொராக் நுழைவுப் பிரதேசம், கிழக்கிலிருந்து மேற்காக சுமார் 12 கிலோமீட்டர் (7 மைல்) நீளமுள்ள ஒரு நில வழித்தடமாகும், இது கான் யூனிஸ லிருந்தும் ரபாவையும் அதன் அண்டை நாடான எகிப்துடனான எல்லைக் கடவையையும் துண்டிக்கிறது.

மொராக் என்பது 2005 இல் அகற்றப்பட்ட முந்தைய இஸ்ரேலிய குடியேற்றமொன்றின் பெயராகும். அதே போல் மத்திய காஸாவில் உள்ள நெட்சாரிம் நுழைவுப் பிரதேசம், இது வடக்கு காசாவிலிருந்து தெற்குப் பகுதியைப் பிரிக்கிறது. சோதனைச் சாவடிகள் மூலம் இரு பகுதிகளுக்கும் இடையிலான மக்கள் நடமாட்டத்தினை இஸ்ரேலிய பாதுகாப்புப் படை கட்டுப்படுத்துகிறது. யுத்த நிறுத்தத்தின் போது இராணுவம் இப்பகுதியை விட்டு வெளியேறியது, ஆனால் மார்ச் மாதத்தில் மீண்டும் அங்கு குவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் எங்களை எமது வீடுகளுக்கு மீளத் திரும்புவதைத் தடுப்பதற்காக 'மிரட்டவும் அரசியல் அழுத்தத்தை ஏற்படுத்தவும்' விரும்புகிறது என அபு தாஹா நம்புகிறார். இருப்பினும், 'பிரச்சனை என்னவென்றால், காஸ ாவின் எதிர்காலம் எப்படி இருக்கப்போகின்றது என்பது தெரியவில்லை' எனவும் அவர் தெரிவித்தார்.

இஸ்ரேலிய அரசாங்கம் காஸ ாவில் அடுத்த நாளுக்கான எந்தத் திட்டங்களையும் பகிர்ந்து கொள்ளவில்லை, மேலும் அதன் நகர்வுகளை ஹமாஸ் மீதான அதன் அதிகபட்ச அழுத்த மூலோபாயத் தின் ஒரு பகுதியாக சித்தரித்துள்ளது. இஸ்ரேலிய அரசாங்கம் நீண்டகால இராணுவக் கட்டுப்பாட்டிற்கான அடித்தளத்தை அமைத்து வருவதாக மனித உரிமைகள் குழுக்கள் கூறுகின்றன. இஸ்ரேலுடனான காஸா எல்லைப் பகுதியை பல்வேறு பகுதிகளாகப் பிரிப்பதன் மூலம், ஏற்கனவே உள்ள சூனியப் பிரதேசத்தை விரிவுபடுத்துகின்றது.

**மக்களின் புதிய இடம்பெயர்வு**

அண்மைய தாக்குதலால் புதிதாக இடம்பெயர்ந்த சுமார் 400,000 பேரில் அபு தாஹாவும் ஒருவர் என ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு அலுவலகம் (UNOCHA) தெரிவித்துள்ளது. ஜனவரியில் யுத்த நிறுத்தத்தின் போது லட்சக்கணக்கான இடம்பெயர்ந்த மக்கள் தெற்கிலிருந்து வடக்கு நோக்கித் திரும்ப முடிந்தாலும், தற்போது பலர் மேற்கு நோக்கிச் செல்லுமாறு இஸ்ரேலிய இராணுவத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு அலுவலகத்தின் கூற்றுப்படி, கிட்டத்தட்ட 70 வீதமான பிரதேசங்கள் 'இடமாற்ற உத்தரவு' அல்லது 'தடை செய்யப்பட்ட' வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன, அங்கு மனிதாபிமான குழுக்கள் தங்கள் இயக்கங்களை ஒருங்கிணைக்க வேண்டும் என இஸ்ரேலிய அதிகாரிகள் கோருகின்றனர்.

இஸ்ரேலிய இராணுவம் பலமுறை இந்த வெளியேற்றங்கள் பொது மக்களை தீங்கு விளைவிக்காமல் இருக்க வேண்டும் என்று கூறி வருகிறது, மேலும் சிலர் பாலஸ்தீன போராளிகள் அண்மையில் இஸ்ரேலுக்குள் ரொக்கெட்டுகளை வீசிய பகுதிகளை குறிவைத்துள்ளனர். ஒரு திட்டத்தை வலுக்கட்டாயமாக மாற்றுவதற்கு சமம் என் ஐ.நா. குறிப்பிடும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் சர்ச்சைக்குரிய 'இடமாற்றுத் திட்டம்' தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் காட்ஸ் 2.3 மில்லியன் காஸா மக்களுள் 'ஆர்வமுள்ள அனைவருக்கும்' ஏனைய நாடுகளுக்கு 'தன்னார்வ அடிப்படையில் செல்ல விரும்புப வர்களுக்கு' அனுமதியளிக்கப்படும் என்று வார இறுதியில் மீண்டும் வலியுறுத்தினார்.

**விரிவாக்கப்பட்ட சூனியப் பிரதேசம் கிராமங்கள் மற்றும் விவசாய நிலங்களை உள்ளடக்கியுள்ளது**

பிரதேசத்தின் இடமாற்றம் மற்றும் பிரிப்புக்கு மேலதிகமாக, இஸ்ரேல் படிப்படியாக காஸாவின் உள்ளே ஏற்கனவே இருக்கும் சூனியப் பிரதேசத்தை மேலும் விரிவு படுத்தியுள்ளது, இது வடக்கிலிருந்து கிழக்கில் இஸ்ரேலுடனான எல்லைப் பகுதியில் எகிப்தின் தெற்கு எல்லை வரை நீண்டுள்ளது.

ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீன பிரதேசங்களில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள முன்னாள் இஸ்ரேலிய பாதுகாப்புப் படை வீரர்களின் சாட்சியங்களை சேகரிக்கும் 'பிரேக்கிங் தி சைலன்ஸ்' அமைப்பு கடந்த வாரம் ஒரு அறிக்கையை வெளியிட்டது, அதில் அவர்கள் சூனியப் பிரதேசத்தில் வீடுகள், உள்கட்டமைப்பு மற்றும் விவசாய நிலங்களை முறையாக அழிப்பது என விவரிக்கின்றனர்.

அந்தப் பகுதிகள் தற்போது பெரும்பாலும் பாலஸ்தீனர்களுக்கு தடைசெய்யப்பட்ட பகுதியாகக் காணப்படுகின்றது என அவர்கள் கூறுகிறார்கள்.

'விவசாய நிலங்கள், கல்லறைகள், கைத்தொழில் பகுதிகள், வீடுகள் என அனைத்தையும் நாங்கள் இடித்தோம். அது எங்களுக்கு அதிக பாதுகாப்பைத் தரும் என இஸ்ரேலிய பாதுகாப்புப் படை கருதுகின்றது. ஏனென்றால் ஹமாஸ் அல்லது இஸ்லாமிய ஜிஹாத் நெருங்கி வருவதை நாம் அவதானிக்க முடியும்,' என பிரேக்கிங் தி சைலன்ஸ்- இன் முகாமைத்துவப் பணிப்பாளர் நடவ் வெய்மன் தெரிவித்தார்.

தற்போது சூனியப் பிரதேசத்தில் சேர்க்கப்பட்டுள்ள நிலத்தின் பெரும்பகுதி முன்னர் விவசாய நிலமாக இருந்தவையாகும், இதன் காரணமாக நீண்டகால தாக்கமாக காஸா அதன் சொந்த உணவு உற்பத்தியில் சிலவற்றையாவது மீண்டும் உற்பத்தி செய்ய முடியுமா என்ற கேள்வி எழுகின்றது.

பிரேக்கிங் தி சைலன்ஸ் நிறுவனத்தின் மதிப்பீடுகளின்படி, சில பகுதிகளில் சூனியப் பிரதேசம் 2.5 கிலோமீட்டர் (1.6 மைல்) வரை அகலமாக உள்ளது, கிழக்கு காஸா நகரத்தில் உள்ள ஷெஜையா போன்ற நகர்ப்புற பகுதிகள் வரை செல்கின்றது..

'எல்லைக்கு அருகிலுள்ள அனைத்து பகுதிகளும் - வடக்கு, தெற்கு மற்றும் கிழக்கு - கைப்பற்றப்பட்டு பீரங்கி குண்டுவீச்சுக்கு உள்ளாகியுள்ளன. காஸா பகுதிக்குள் உள்ள அனைத்து பகுதிகளும் வான்வழி குண்டுவீச்சுக்கு உள்ளாகியுள்ளன. தப்பிக்க வழி இல்லை,' என 43 வயதான பலஸ்தீன பெண்ணொருவர் மேற்கு காஸ ா நகரத்திலிருந்து தொலைபேசி மூலம் சர்வதேச ஊடகமொன்றிடம் தெரிவித்தார். அங்கு அவரது குடும்பம் தற்போது உறவினர்களுடன் தங்கியுள்ளது.

'சந்தையில் துப்புரவுப் பொருட்கள் இல்லை, குடிநீர் இல்லை, போதுமான உணவு இல்லை, எரிவாயு இல்லை, மேலும் சுகாதார நிலைமை மோசமாக உள்ளது' என தனது குடும்பத்திற்கு அதிகரித்து வரும் கடினமான தினசரி போராட்டத்தை விளக்கினார்.

'தற்போதைய காஸா முன்பு இருந்த காஸா அல்ல. எமது குழந்தைகளுக் காகவும் சிறந்த எதிர்காலத்திற்கான நம்பிக்கையுடனும் நாங்கள் உயிர்வாழ முயற்சிக்கிறோம்,' என அவர் மேலும் தெரிவித்தார்.

## மனநலமும் ஆலோசனையும் 79

# நல்ல வார்த்தைகள் நல்ல மனிதர்களை உருவாக்கும்



நாங்கள் பேசும் வார்த்தைகள் சக்திவாய்ந்தவை என்பதை நாங்கள் அறிவோம், அவை நல்லவையாக இருந்தாலும் சரி, மோசமானவையாக இருந்தாலும் சரி. நாம் வெளிப்படுத்தும் வார்த்தைகள் எப்போதும் எம் பிள்ளைகள் வாழ்வில் எதோ விதங்களில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

எம் பிள்ளைகள் எங்களைப் பற்றி எப்படி நினைக்கிறார்கள், எப்படி உணர்கிறார்கள் என்கிற எல்லாமே எங்கள் வார்த்தைகளின் உள்ளடக்கத்தில் இருந்தும் கற்றுக் கொள்கிறார்கள். அதே போல் அவர்கள் பேசும் வார்த்தைகளும் அதுபோன்ற பாணியில் வெளிப்படுவதுடன் அவர்கள் செயல்களும் அந்த முறையில் வடிவமைக்கப்பட முடியும்.

பிள்ளைகள் யார் என்பதையும் அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதையும் அவர்கள் பேசும் வார்த்தைகளே அவர்களை சமூகத்திற்கு அறிமுகம் செய்யும் மிக முக்கிய கருவியாக அமைய முடியும். நாம் என்ன நினைக்கிறோம், எப்படி நினைக்கிறோம், எமக்கு என்ன தெரியும், நாம் எதை நம்புகிறோம் என்பன நம் வாழ்க்கையில் பெரிய அளவில் தாக்கம் செலுத்துகிறது. எம் மனதில் உள்ள இந்த எண்ணங்களும் அறிவும் பெரும்பாலும் நாம் கேட்கும் வார்த்தைகளால் வடிவமைக்கப்படுகின்றன என்பதே உண்மையாகும். எனவே நாம் எம் பிள்ளைகள் முன் பேசும் வார்த்தைகள் மீது மிகுந்த கவனம் செலுத்த வேண்டியிருக்கிறோம். நேர்மையான வார்த்தைகளை வடிகட்டி வெளிப்படுத்த கடமைப்பட்டு இருக்கிறோம்.

நாம் பேசும் வார்த்தைகள் எம் பிள்ளைகளின் மனதில் நழுவி அவர்களின் வாழ்க்கையை வடிவமைக்கிறது.

இதில் உள்ள பேருண்மை என்னவென்றால், எமது பேச்சும், பேச்சை வெளிப்படுத்தும் முறையும் எம் பிள்ளைகளின் வாழ்க்கையில் மிகவும் ஆழமாக தாக்கம் புரிகின்றன.

எம் வார்த்தைகள் எம் பிள்ளைகளின் வாழ்க்கையின் ஒரு பகுதி என்பது கண்கூடான உண்மை. எனவே நாம் உண்மையில் இதற்கு பதிலளிக்க வேண்டும். வகை கூறவேண்டும். பிள்ளையின் மொழி விருத்தியில் எங்கள் வார்த்தைகள் நேரடியாக செல்வாக்கு செலுத்துவதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எங்கள் பிள்ளைகள் புத்திசாலிகளாக பிறக்கவில்லை, அவர்கள் புத்திசாலிகளாக ஆக்கப்படுகிறார்கள். அவர்கள் பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்கள் அவர்களுடன் பேசுவதன் மூலமும் அழகாக தொடர்புகொள்வதன் மூலமும் புத்திசாலிகளாக ஆக்கப்படுகிறார்கள்.

இங்கு நாம் பேசும் வார்த்தைகளின் தாக்கம் மிகப்பெரியது.

நாங்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் எங்கள் பிள்ளையின் மூளையை வளர்க்கிறது. நடத்தையை வடிவமைக்கிறது. அதற்கு உதவும் வகையிலான வார்த்தைகளை நாம் பயன்படுத்துகிறோமா? பிள்ளை அழகான மொழி பேசும் நல்ல மனிதனாக வாழ எங்கள் வார்ப்புருக்கள் வழிகோலுமா? சிந்திப்போம்.!

எங்கள் பிள்ளையின் மூளையை உண்டியல் போல நினைத்துப் பார்ப்போம். நாங்கள் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் வங்கியில் இடும் நாணயம் போன்றது. நாங்கள் எவ்வளவு அதிகமாகப் பேசுகிறோமோ அவ்வளவுக்கு எங்கள் பிள்ளையின் மூளை வளமாகிறது. நாங்கள் இப்போது எவ்வளவு அதிகமாக முதலீடு செய்கிறோமோ அவ்வளவுக்கு எங்கள் பிள்ளை பிற்காலத்தில் வளமானவராக இருக்க காரணமாக அமையும்.

எங்கள் பிள்ளையின் வங்கியில் எத்தனை வார்த்தைகளைச் சேர்க்கலாம் என்பதற்கு வரம்பு இல்லை, எனவே நாம் எம் பிள்ளைகளுடன் பேசவும் தொடர்பு கொள்ளவும் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ளலாம். ஆக்கமும் ஊக்கமும் தரக் கூடிய வார்த்தைகளாக எங்கள் வார்ப்புருக்கள் இருப்பது அவசியமாகும். எங்கள் நல்ல வார்த்தைகள் நல்ல மனிதர்களை உருவாக்க முக்கிய காரணங்களில் ஒன்றாக இருக்கட்டும்.



அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்

---




நாச்சியாதீவு பர்வீன்

# மரீனா இல்யாஸ் ஷாபியின் "என்மேல் விழுந்த மழைத்துளிகள்"

## - ஒரு கண்ணோட்டம் -

- என். நஜ்முல் ஹுசைன் -

கலாநிதி மரீனா இல்யாஸ் ஷாபி அவர்களின் அனுபவங்கள் மற்றுமொரு நூலாக எங்கள் கரம் கிட்டியிருக்கிறது. முன்பு வெளிவந்த நூல் "என் சிறையில் சிக்கிய வானம்". இப்போது "என்மேல் விழுந்த மழைத்துளிகள்". இரண்டு தலைப்புகளுமே கவித்துவமானவை.

தனது பயண அனுபவங்களை தொடர்ச்சியாக முகநூலில் எழுதி வருபவர் மரீனா இல்யாஸ் ஷாபி. உடனுக்குடனே அதற்கான பின்னூட்டங்கள் அவருக்குக் கிடைத்து விடுகின்றன. அவரது எழுத்தை வாசிக்க ஒரு பட்டாளமே இருக்கிறது என்பது மறுக்கமுடியாத உண்மை. அந்தப் பட்டாளத்தில் நானும் இருக்கிறேன் என்பது மற்றொரு உண்மை.

அவ்வப்போது பலரது பயணக் கட்டுரைகளை வாசிக்கும் வாய்ப்புகள் எனக்கும் கிடைத்துள்ளன. என்றாலும் எல்லாவற்றையும் முழுமையாக வாசித்திருக்கிறேனா என்றால் சந்தேகமே. சில ஆக்கங்கள் இடைநடுவில் அலுப்பை ஏற்படுத்திவிடும். மணியனின் "இதயம் பேசுகிறது" எனும் பயணக் கட்டுரை நூல் மிகவும் சுவாரசியமாக நான் வாசித்த நூல்.

எமது எழுத்தாளர் மரீனா இல்யாஸ் ஷாபியிடம் அவ்வாறு சுவாரசியமாக எழுதும் ஆற்றல் உள்ளது. தனது அனுபவங்களை மிக மிகச் சுவையாகவும், சுவாரசியமாகவும் இந்நூல் முழுவதும் அவர் பேசியுள்ளார்.

அவரிடம் இருக்கும் எழுத்து நடை வாசிப்போரை வசியப்படுத்துபவை.

ஆனால், அதற்காக அவர் தனது எழுத்துகளை தன்னைச் சிரமப்படுத்திக் கொண்டு முன்வைக்கவில்லை. இவரது ஆக்கங்களை வாசிக்கும்போது இவரது எழுத்துகள் எவ்வித சிரமமுமின்றி வந்து விழுந்துள்ளன என்பதை புரிந்து கொள்ளலாம். ஒவ்வொரு சொல்லும் எளிமையான சொல். சாதாரணமானவர்களும் புரிந்து கொள்ளும் சொல்.

சரி, இந்நூலை வெறுமனே சுவாரசியமான நூல் என்று மட்டும் அடையாளப்படுத்திவிட முடியாது. மனதை கனக்க வைக்கும் பல சம்பவங்கள் இந்நூலெங்கும் விரவிக் கிடக்கின்றன.

இந்நூலாசிரியர் ஒரு சிறந்த எழுத்தாளராக மட்டும் தன்னை அடையாளப்படுத்தவில்லை. அதனோடு சேர்த்து மனிதாபிமான மிக்கவராகவும் தன்னை இனங் காட்டியுள்ளார்.

ஒருபடி மேல் சென்று மற்றையோரும் சிறந்த மனிதர்களாகவே வாழ வேண்டும் என்பதில் தன் உறுதியை நிலை நாட்டியுள்ளார். இவரது என்னுரையே மிகவும் சொல் நயத்துடன் எழுதப்பட்டுள்ளது. அதனை வாசிக்கும்போதே இந்நூல் முழுவதையும் கீழே வைக்காமல் வாசிக்க வேண்டும் என்ற உணர்வைத் தூண்டுகிறது. இலங்கையில் தனது பெற்றோரின், உறவினர்களின் அரவணைப்பில் இன்பமாக, கவலையற்று




வாழ்ந்ததையும் தானொரு "குருவிக் குஞ்சாக" பாதுகாக்கப்பட்டதையும் அழகுற சொல்லிய அவர், "ஓட்டுக்குள் பதுங்கியிருக்கும் ஆமை போல வாழ்வது, பாதுகாப்பு உணர்வைக் கொடுக்கலாம் . ஆனால்,

காட்டுக்குள் வாழும் ஒரு மான்குட்டியின் வாழ்வில் கிடைக்கும் அனுபவங்களுக்கு அது ஈடாக மாட்டாது. காட்டில் வாழும் சிங்கம், புலி, ஓநாய் போன்ற இன்னோரன்ன மிருகங்களிடம் இருந்து தப்பிப் பிழைத்து வாழ்வது என்பது ஒரு கலை. என் வெளிநாட்டு வாழ்க்கையும் காட்டில் வாழும் ஒரு மானின் போராட்டத்துக்கு ஒப்பானது "

என்று குறிப்பிடுகிறார். இவை நான் பலமுறை வாசித்த வரிகள். இவரது எழுத்தை எண்ணி நான் வியந்த இடம் எனக் கூடச் சொல்லலாம்.

இது தன்னகத்தே முப்பத்து மூன்று அனுபவக் கட்டுரைகளைக் கொண்டிருக்கிறது. அத்தனை ஆக்கங்களும் சிறிய ஆக்கங்கள்தான்.

ஒவ்வொரு ஆக்கமும் அவரது அனுபவத்தை சொல்லுவதோடு நின்றுவிடவில்லை. மனித விழுமியங்களைப் பேசியுள்ளது.

திருமணம் முடித்த கையோடு மலேசியாவில் குடியேறியவர். அங்கே கொஞ்சம் பாதுகாப்பாக உணர்ந்த இவர் நியூசீலாந்தில் நிரந்தரமாக தங்கியபோது பாதுகாப்பற்றத் தன்மையையும், பல அபாயங்களையும் சந்தித்துள்ளார். இவை அத்தனையிலும் அவருக்கிருந்த ஒரேயொரு துணை அவரது துணைவர் ஷாபி அவர்கள்தான். துணைவர் என்ற சொல்லுக்கு சரியான அர்த்தத்தை அவர் காட்டியுள்ளார் என்பதை மரீனா அவர்கள் தனது வாக்குமூலமாக இதில் பதிவு செய்துள்ளார்.

இவரது முதல் கட்டுரை இவருக்கேற்பட்ட விபத்து பற்றி பேசுகிறது. ஒன்றுக்கு இரண்டு விபத்துகளைச் சந்தித்து சக்கர நாற்காலிக்குள் சிறை வைக்கப்பட்டவர். எப்படி எழுந்து நடந்தார் என்பதை விளக்கியுள்ளார். அங்கே வல்லானாம் அல்லாஹ்வின் நம்பிக்கையை விதைத்துள்ளார். படிக்கும் எங்களுக்கும் அசைக்க முடியாத இறைநம்பிக்கை வரவேண்டும் என்ற அவரது எழுத்து முயற்சி வெற்றிப் பெற்றுள்ளது என்பதை உறுதியாக கூறலாம்.

இரண்டாம் கட்டுரை பஸ் பயணம் பற்றி பேசுகிறது. இலங்கையில் பஸ்ஸில் பிரயாணம் செய்யும்போது பஸ் சாரதியைப் பற்றிய எண்ணம் என் மனதில் இவ்வாறு விரிவதுண்டு.

"மனிதன் பாதி மிருகம் பாதி சேர்த்து செய்த கலவை இவன். வழி நெடுகிலும் பிரயாணிகளை ஏற்றும்போது மனிதன். தரிப்பு நிலையத்தில் இறக்கும்போது மிருகம்". இவ்வாறுதான் பல சாரதிகளை நாங்கள் காண்கிறோம். நாளாந்தம் இப்படியான அனுபவங்களைக் கொண்டிருக்கும் எங்களுக்கு இவருக்கு ஏற்பட்ட அனுபவம் ஆச்சரியப்பட வைக்கிறது. இப்படியெல்லாம் பஸ் சாரதிகள் இருக்கிறார்களா ? மனிதர்கள் இருக்கிறார்களா ? என்று வியப்பு கொள்ள வைக்கிறது. நடக்க முடியாமலிருந்த இவரை பஸ்ஸில் ஏற்றும்வரை பொறுமையாக காத்திருந்து இவரது தள்ளு வண்டியை பஸ்ஸுக்குள் தூக்கிச் சென்று வைக்கும் சாரதி இவரை மட்டும் ஆச்சரியத்தில் ஆழ்த்தவில்லை. எம்மையும் ஆழ்த்திவிடுகிறார்.

ஈடு கொடுக்காத உடல் நிலையை வைத்துக் கொண்டு இவர் மனவுறுதியுடன் சென்ற பயணங்கள், முதலில் இவருக்கு சிரமத்தை வழங்கினாலும் இறுதியில் அந்த முயற்சியில் வெற்றி பெற்றதை சிறப்பாக விளக்கியுள்ளார். நாங்களும் மனவுறுதியைக் கைக்கொண்டால் எதிலும் வெற்றி பெறலாம் என்பதை நாசுக்காக சொல்லியிருக்கிறார்.

Tasman iceberg எனப்படும் பனிப்பாறை, Tongariro crossing, devil 's staircase போன்ற பல இடங்களை எங்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளார். நமது நாட்டிலே பிரபலமற்ற Hitch Hiking பற்றியும் சொல்லித் தந்துள்ளார்.

மேலைநாடுகளில் முஸ்லிம் பெண்களைப் பார்த்து கேட்கப்படும் கேள்வியான "உங்கள் கணவருக்கு எத்தனை மனைவிகள்... ?" என்பதனை தனது மாணவர்கள் கேட்ட போது எவ்வாறு அக் கேள்விக்கு பதில் கொடுத்து அவர்கள் வாயை அடக்கினார் என்பதைப் படிக்கும்போது எங்கள் அறிவுக் கண்களையும் திறந்து எங்களை நிமிர்ந்து உட்கார வைக்கிறார்.

மேலைநாடுகளில் மக்கள் மீது நம்பிக்கை வைத்து திறக்கப்பட்டிருக்கும் வியாபாரிகள் அற்ற கடைகளையும் நமக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறார். அடடா இப்படியெல்லாம் அங்கே இருக்கின்றனவா, இப்படியான மனிதர்கள் உலகில் வாழ்கிறார்களா என்று எண்ண வைத்திருக்கிறார். நாங்கள் மட்டும்தான் உலகில் நல்ல மனிதர்கள். உலகில் வாழும் அதிகமானோர் கெட்டவர்களே என்ற எங்கள் எண்ணத்திற்கு ஆப்பு வைத்திருக்கிறார்.

தனக்கு, தன் கணவருக்கு ஏற்பட்ட துன்பியல் நிகழ்வுகளையும் அப்போது பெற்ற அனுபவங்களையும் பதிவு செய்துள்ளார். அவ்வாறானவற்றைப் படிக்கும் போது எமது உள்ளங்களும் பதறிக் கொண்டுதானிருந்தன என்பது உண்மையே.

கடுமையான மனங் கொண்டவரையும் அன்பினால் திருத்தியதை படங்களில் பார்த்திருக்கிறோம். To Sir, with Love திரைப்படம் அவ்வாறு ஒரு கதையைச் சொன்னது. அவ்வாறு ஓர் அனுபவத்தை எழுத்தாளர் நிதர்சனமான தன் வாழ்வில் கண்டுள்ளார்.

உண்மையைச் சொன்னால் அப்பப்பா இந்நூலை நான் ஒரு வாசகனாகவே வாசித்தேன். பல இடங்களில் என் விழிகளை அகலத் திறந்தேன். சில இடங்களில் மனம் நெகிழ்ந்தேன். இன்னும் சில இடங்களில் நான் புதிய பாடங்கள் கற்றேன்.

மொத்தத்தில் இது வெறும் வாசிப்புக்குரிய நூலல்ல் வாழ்வதற்குரிய நூல்.

---

## தேர்தல் காலம்

இருள் மூடிய
இடங்களெல்லாம்
இன்னும் சில நாட்களுக்கு...
மின் விளக்குகளின் அலங்காரம்!

செப்பனிடப்படாத
பாதைகளெல்லாம்
கொஞ்சம் கொஞ்சமாக
கொன்கிரீட்களின்...
செதுக்கல் வடிவம்!
மூலைமுடுக்குகளில்
முடங்கி நிற்கும்
சமூகத்தை...
சந்திக்க ஏராளமான
சவாரிகள்!

சாலையோரமாய்
அடைத்துக் கொண்டிருந்த
சாக்கடைகளுக்கு...
அசுத்தங்களிலிருந்து விடுதலை!

ஆங்காங்கே...
அலறிக்கொண்டிருந்த
குப்பைக் கூளங்கள்
குழிகளுக்குள்...
மரண ஓலம்!

துருப்பிடித்த ஊரின்
துருவங்கள்
துயர் நீக்குவோம்...
என்ற பெயரில்
காசு கொடுத்து...
தூசு தட்டும் நிலை!

சினங்களால்...
சிவந்து போன முகங்களும்
சனங்களாக ஒன்று கூடி...
சரித்திரம் படைக்க
ஆரம்பித்து விட்டன!

நிறங்களால்
மாறிக் கொண்டிருக்கும்...
பச்சோந்திகளும்
பாசாங்கு கண்ணீரைப்
பொழிந்த வண்ணம்
பொதுமக்களிடம்...
வாய்விட்டுச் சிரித்தபடி
வாக்குப்பிச்சை கேட்கின்றன!
ஏனெனில்...
இது தேர்தல் காலம்
என்பதால்....

பயாஸா பர்வீன்
- பலகத்துறை -

# அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கையில் மாற்றம் மத்திய கிழக்கு உறவில் புதுத் திருப்பம்

## ட்ரம்ப் விஜயத்தின் வரலாற்று நிகழ்வு

(எம்.ஐ.அப்துல் நஸார்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால் ட்ரம்ப் கடந்த மே 13 முதல் 16 வரை சவூதி அரேபியா, கட்டார் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டிருந்தார்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால ட்ரம்ப் மேற்கொண்ட அண்மைய விஜயம், அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கையில் முக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

**முக்கிய நிகழ்வுகள் மற்றும் ஒப்பந்தங்கள்**

சவூதி அரேபியா: டிரம்ப் மற்றும் சவூதி இளவரசர் மொஹமட் பின் ஸல்மான் இடையே பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இதில், பாதுகாப்பு, ஆற்றல் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான ஒப்பந்தங்கள் அடங்கும். மேலும், சவூதி அரேபியாவின் பொதுத் முதலீட்டு நிதி, அமெரிக்காவில் பல்வேறு முதலீடுகளை மேற்கொள்ள ஒப்பந்தம் செய்தது.

கட்டார்: கட்டார் ஏர்வேஸ், போயிங் நிறுவனத்துடன் 210 விமானங்களை கொள்வனவு செய்யும் ஒப்பந்தம் கைச்சாத்தானது, இது போயிங் நிறுவனத்தின் வரலாற்றில் மிகப்பெரிய ஒப்பந்தமாகும். மேலும், பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப துறைகளில் பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

ஐக்கிய அரபு அமீரகம் : அபுதாபியில், டிரம்ப், ஷேக் செய்யித் கிராண்ட் பள்ளிவாசலை பார்வையிட்டார் மற்றும் பு42 என்ற அமீரக செயற்கை நுண்ணறிவு நிறுவனத்துடன், அமெரிக்காவுக்கு வெளியே மிகப்பெரிய செயற்கை நுண்ணிறிவு தரவுத்தளத்தை நிறுவும் ஒப்பந்தத்தை அறிவித்தார்.

**வெளிநாட்டு கொள்கை மாற்றங்கள்**

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன விவகாரம் தொடர்பில் டிரம்ப், இஸ்ரேலின் மீது ஹமாஸ் மேற்கொண்ட தாக்குதலை குறைவாகவே விமர்சித்தார்.

இது, இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவை அதிருப்தியடைய செய்தது. மேலும், டிரம்ப்,



காஸாவில் “சுதந்திர வலயம்“ என்ற புதிய திட்டத்தை முன்வைத்தார்.

ட்ரம்ப், சிரியாவின் இடைக்கால தலைவர் அக்மத் அல்-ஷராவை சந்தித்து, சிரியா மீது அமெரிக்கா விதித்திருந்த அனைத்து தடைகளையும் நீக்குவதாக அறிவித்தார்.

ஈரானுடன் அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தார். இந்த பேச்சுவார்த்தைகள், ஓமானில் நடைபெற்றன. மேலும், ஹூதி கிளர்ச்சியாளர்களுடன் அமெரிக்கா ஒரு சமாதான ஒப்பந்தத்தை எட்டியது.

**அமெரிக்காவில் எழுந்துள்ள உள்நாட்டு விமர்சனங்கள்**

முன்னாள் உப ஜனாதிபதி மைக் பென்ஸ், டிரம்ப் வெளியுறவு கொள்கையை கடுமையாக விமர்சித்தார். அவர், ட்ரம்ப், சவூதி அரேபியாவில் அமெரிக்காவை விமர்சித்ததை “அமெரிக்க படைவீரர்களை அவமதிப்பது“ எனக் கூறினார். மேலும், கட்டார் அரச குடும்பத்திடம் இருந்து 400 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான விமானத்தை டிரம்ப் பெற்றதை விமர்சித்தார்.

**கலாச்சார பிரதிபலிப்பு**

“ஞயவரசனயல ளேபைாவ டுளைந” நிகழ்ச்சியில், டிரம்ப் மற்றும் சவூதி இளவரசர் மொஹமட் பின் ஸல்மானின் உறவை நகைச்சுவையாக சித்தரித்தனர். இது, ட்ரம்ப் பெற்ற 400 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான விமானம் மற்றும் அவரது மத்திய கிழக்கு பயணத்தை கேலி செய்தது.

இந்த விஜயம், அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கையில் புதிய பாதையை அமைத்துள்ளது. வர்த்தக ஒப்பந்தங்கள், மசகு எண்ணெய் மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தங்கள் மூலம், ட்ரம்ப், மத்திய கிழக்கு நாடுகளுடன் உறவை வலுப்படுத்த முயன்றுள்ளார். இது, எதிர்காலத்தில் அமெரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின் உறவுகளில் முக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தலாம்.

---

மங்கையொளி

# பெண்களே... நேரத்தை விவேகமாக நிர்வகிக்க உங்களால் முடியும்!

பயாஸா பாஸில்

நேரத்தை முறையாக ஒழுங்கமைத்துக்கொள்ள பெண்களுக்கான சில வழிகள் இன்றைய வேகமான உலகில், பெண்கள் பல பொறுப்புகளை ஒரே நேரத்தில் மேற்கொள்கிறார்கள் குடும்பம், வேலை, கல்வி, சொந்த விருப்பங்கள் என பல துறைகளில் சாதிக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. இத்தகைய சூழ்நிலையில், நேர மேலாண்மை என்பது வெறும் வேலைநேரக் கட்டுப்பாடு மட்டுமல்ல, நம்முடைய மனஅமைதி, வளர்ச்சி மற்றும் மகிழ்ச்சிக்கான அடிப்படை என்றும் கூறலாம்.

நேரத்தை திட்டமிட்டு, முன்னுரிமைகளை வகுத்து செயல் படுவது மூலம்:

பணிகளின் மேலெழுச்சியை தவிர்க்கலாம்

தினசரி கவலை மற்றும் அழுத்தத்தை குறைக்கலாம்

தனக்கென நேரம் ஒதுக்கி, ஆரோக்கிய வாழ்வை வழிமொழியலாம்

குடும்பத்தினருடன் தரமான நேரத்தை செலவழிக்க முடியும் திறமைகளை மேம்படுத்தி, கனவுகளை அடைய முடியும்

எனவே, பெண்கள் தங்கள் நேரத்தை விவேகமாக நிர்வகிக்க முடியும் என்றால், அவர்கள் வாழ்க்கை மிகச் சீரானதாகவும் நிறைவானதாகவும் அமையும்.

சில வழிகாட்டல்கள்

1. முன்னுரிமைகளைத் தீர்மானிக்கவும்

எந்த வேலை முதன்மை என்பதைத் தீர்மானிக்காமல் எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் செய்ய முயல்வது அழுத்தத்தை உண்டாக்கும். முக்கியமான மற்றும் அவசரமான பணிகளை முதலில் முடிக்கவும்.

2. நாள்தோறும் திட்டமிடுங்கள்

ஒவ்வொரு நாளும் அல்லது வாரமும் செய்ய வேண்டிய பணிகளை பட்டியலிடுங்கள். To do list அல்லது planner பயன்படுத்தலாம்.

3. “இல்லை” என்று சொல்ல கற்றுக்கொள்ளுங்கள்

எல்லாவற்றையும் ஏற்க வேண்டும் என்ற அவசியமில்லை. உங்கள் நேரத்தை மதித்து, தேவையற்ற விஷயங்களில் நேரம் வீணாகக்கூடாது.

4. தொழில்நுட்பத்தைக் கையாளவும்

மொபைல் ஆப்கள் (e.g., Google Calendar, Notion, Todolist) மூலம் வேலைகளை திட்டமிடலாம், நினைவூட்டல்களை அமைக்கலாம்.

5. தனக்கென நேரம் ஒதுக்கவும்

தனிநபர் நலம் மிக முக்கியம். புத்தக வாசித்தல், மெடிடேஷன், நடைப்பயிற்சி போன்ற செயல்களுக்குப் பத்து நிமிடமாவது ஒதுக்குங்கள்.

6. பணி ஒதுக்கீடு செய்யவும்

வீட்டு வேலைகளில் குடும்பத்தினரை ஈடுபடுத்துங்கள். எல்லாவற்றையும் தனக்கே செய்ய வேண்டுமென்று நினைத்தல் தவிர்க்க வேண்டிய ஒன்று.


7. ஒரே நேரத்தில் பல வேலைகளை செய்யாதீர்கள்

Multitasking தவிர்த்து, ஒரு வேலையை முழுமையாக செய்து முடித்தால் அதிக நேரமும் சேமிக்கலாம், மன அழுத்தமும் குறையும்.

8. ஓய்விற்கும் முக்கியத்துவம் கொடுங்கள்

ஓய்வின்றி வேலை செய்வது உழைப்பு மட்டுமல்ல, சோர்வையும் தரும். துயிலும், உணவும் சரிவர இருக்க வேண்டும்.

இந்த வழிமுறைகளை நடைமுறையில் கொண்டு வந்தால், நேரத்தை சீராகவும் திறமையாகவும் நிர்வகிக்க முடியும்.






அரபாத் பஹுர்தீன்

# இலங்கை டெஸ்ட் அணிக்கு 7.19 கோடி ரூபா பரிசு வழங்கும் ஐசிசி


ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டியில் கோப்பையை வெல்லும் அணிக்கு பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டுள்ளதுடன் இலங்கை அணிக்கும் பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டுள்ளது.
இந்த போட்டியில் கலந்து கொண்ட அணிகளுக்கு புள்ளி பட்டியலில் பிடித்த இடங்களை கணக்கில் கொண்டு பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டுள்ளது.
அதன்படி 6ஆவது இடம் பிடித்த இலங்கை அணிக்கு ரூ. 7.19 கோடி பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டுள்ளது.
அதனடிப்படையில் 3ஆவது இடம் பிடித்த இந்திய அணிக்கு ரூ.12.33 கோடியும் 4ஆவது இடம் பிடித்த நியூசிலாந்து அணிக்கு ரூ. 10,28 கோடியும் 5ஆவது இடம் பிடித்த இங்கிலாந்து அணிக்கு ரூ.8,22 கோடியும் 6ஆவது இடம் பிடித்த இலங்கை அணிக்கு ரூ.7,19 கோடியும் 7ஆவது இடம் பெற்ற பங்களாதேஷ் அணிக்கு ரூ. 6,17 கோடியும், 8ஆவது இடம் பிடித்த மேற்கிந்திய தீவுகள் அணிக்கு ரூ.5,14 கோடியும் கடைசி இடம் பிடித்த பாகிஸ்தானுக்கு ரூ.4,11 கோடியும் பரிசுத்தொகையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# இத்தாலி ஓபன் டென்னிஸ் தொடர்: இறுதிப் போட்டிக்குள் நுழைந்தார் ஜானிக் சின்னர்



இத்தாலி ஓபன் டென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவின் அரையிறுதி போட்டியில் போராடி வெற்றி பெற்ற இத்தாலியின் ஜானிக் சின்னர் இறுதிப் போட்டிக்குள் நுழைந்தார்.
உலகப் புகழ் பெற்ற இத்தாலி ஓபன் டென்னிஸ் தொடர் ரோமில் நடைபெற்று வருருகிறது.
இதில் ஆடவர் ஒற்றையர் பிரிவின் இரண்டாவது அரையிறுதி போட்டியில் நேற்று இத்தாலியின் ஜானிக் சின்னர் மற்றும் அமெரிக்காவின் டாமி பால் ஆகியோர் மோதினர்.
விறுவிறுப்பாக ஆரம்பித்த போட்டியின் முதல் செட் ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்திய அமெரிக்காவின் டாமி பால் முதல் செட்டை மிக இலகுவாக 6:1 என கைப்பற்றி முன்னிலை பெற்றார்.
பின்னர் இடம்பெற்ற இரண்டாவது செட்டில் சுதாகரித்துக் கொண்ட சின்னர் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி 6:0 என கைப்பற்ற போட்டி 1:1 என சமநிலை பெற்றது.
இந்நிலையில் வெற்றியாளரை நிர்ணயிக்கும் தீர்க்கமான மூன்றாவதும் இறுதியுமான செட்டில் இருவரும் பலமான ஆட்டத்தை வெளிப்படுத்திய போதிலும் அசத்தலான ஆட்டத்தை சின்னர் வெளிப்படுத்தி 6:3 என வெற்றி கொள்ள 1:6 , 6:0, 6:3 என்ற செட்களில் வெற்றி பெற்ற இத்தாலியின் ஜானிக் சின்னர் இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.
இன்று நடைபெறும் இறுதிப்போட்டியில் இத்தாலியின் ஜானிக் சின்னர், ஸ்பெயினின் கார்லோஸ் அல்காரசுடன் மோத உள்ளார். 3 மாத தடைக்குப் பிறகு களமிறங்கிய முதல் போட்டியிலேயே ஜானிக் சின்னர் இறுதிக்கு முன்னேறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அதிக சம்பளம் பெறும் விளையாட்டு வீரர் பட்டியலில் ரொனால்டோ தொடர்ந்தும் முதலிடம்



பிரபல ஃபோர்ப்ஸ் (குழசடிநள) பத்திரிகை சமீபத்தில் வெளியிட்ட 2025 ஆம் ஆண்டிற்கான உலகின் அதிக சம்பளம் வாங்கும் விளையாட்டு வீரர்களின் பட்டியலில் உலக கால்பந்து ஜாம்பவான் மற்றும் போர்த்துக்கல் நட்சத்திர வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோ மீண்டும் உலகின் பணக்கார விளையாட்டு வீரராக மாறியுள்ளார்.
கடந்த ஆண்டில் ரொனால்டோ மொத்தம் 275 மில்லியன் டொலர்கள் சம்பாதித்த தாக ஃபோர்ப்ஸ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.
இது ஃபோர்ப்ஸ் வரலாற்றில் ஒரு விளையாட்டு வீரர் ஆண்டுக்கு சம்பாதிக்கும் மூன்றாவது அதிகபட்ச தொகையாகும்.
சவுதி புரோ லீக்கில் அல் நாசர் உதைப்பந்தாட்ட கழகத்தினை பிரதிநிதித்துவப்படுத்துவதன் மூலம் ரொனால்டோ பெரும் வருமானத்தைப் பெற்றார்.
இத்தாலிய கழகமான ஜ/வென்டஸிலிருந்து அல் நாசருக்கு மாறிய பிறகு, அவரது ஆண்டு வருமானம் 200 மில்லியன் டொலரைத் தாண்டியுள்ளது.
களத்தில் விளையாடுவதோடு மட்டுமல்லாமல், களத்திற்கு வெளியேயும் ரொனால்டோ வர்த்தக விளம்பரங்கள் ரீதியாகவும் அதிக பணம் ஈட்டி வருகிறார்.
உலகெங்கிலும் உள்ள பல மதிப்புமிக்க வியாபார நிறுவனங்களுடன் தனது விளம்பர ஒப்பந்தங்கள் மூலமாகவும், தனது சொந்த ஊசு7 நிறுவனத்தின் கீழ் ஹோட்டல்கள், வாசனை திரவியங்கள் மற்றும் ஜிம்கள் போன்ற வணிகங்கள் மூலமாகவும் ரொனால்டோ பணம் சம்பாதித்து வருகிறமையும் குறிப்பிடத்தக்கது.




# டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கான தென்னாபிரிக்க மற்றும் ஆஸி குழாம் அறிவிப்பு

சர்வதேச கிரிக்கெட் பேரவையின் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப்போட்டியில் பலப்பரீட்சை நடாத்தவுள்ள அவுஸ்திரேலிய மற்றும் தென் ஆப்பிரிக்கா ஆகிய இரு அணிகளும் தமது 15 வீரர்கள் கொண்ட குழாத்தினை அறிவித்துள்ளது.
அடுத்த மாதம் இங்கிலாந்தில் இடம்பெறவுள்ள உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டி மற்றும் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான அவுஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணிக்கு பேட் கம்மின்ஸ் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். ஸ்டீவ் ஸ்மித் துணை தலைவராக செயல்படுவார் என கூறப்பட்டுள்ளது. மேலும், அவுஸ்திரேலிய அணியில் காயம் காரணமாக ஒதுங்கி இருந்த சகலதுறை வீரரான கேமஷரூன் கிரீன் மீண்டும் அணியில் இடம்பெற்றுள்ளார்.
அவுஸ்திரேலிய குழாம்
பேட் கம்மின்ஸ் (தலைவர்), ஸ்டீவ் ஸ்மித் (துணை தலைவர்), ஸ்காட் போலந்து, அலெக்ஸ் கேரி, கேமஷரூன் கிரீன், ஜோஷ் ஹேசில்வுட், டிராவிஸ் ஹெட், ஜோஷ் இங்கிலிஸ், உஸ்மான் கவாஜா, சாம் கான்ஸ்டாஸ், மேத்யூ குன்னமென், மார்னஸ் லபுஸ்சேன், நாதன் லயன், மிட்செல் ஸ்டார்க், பியூ வெப்ஸ்டர். என்பவர்களே மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான தொடர் மற்றும் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டிக்கான அவுஸ்திரேலிய அணியில் விளையாடவுள்ளனர்.
அந்தவகையில் டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டிக்காக பலமிக்க நடப்புச் சம்பியனான அவுஸ்திரேலிய அணியை எதிர்கொள்ளும் தென் ஆப்பிரிக்க அணியும் அறிவிக்கப் பட்டிருக்க டெம்பா பவுமா அணியை தொடர்ந்தும் வழிநடாத்துகின்றார்.
தென்னாபிரிக்க குழாம்
டெம்பா பவுமா (கெப்டன்), டோனி டி ஜோர்ஜி, எய்டன் மார்க்ரம், வியான் முல்டர், மார்கோ ஜான்சன், ககிசோ ரபாடா, கேசவ் மகராஜ், லுங்கி நிகிடி, கார்பின் போஷ், கைல் வெர்ரைன், டேவிட் பெடிங்ஹாம், டிரிஸ்டன் ஸ்டப்ஸ், ரியான் ரிக்கல்டன், செனுரன் முத்துசாமி, டேன் பேட்டர்சன் ஆகியோர் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media (PVT) Ltd. நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியிலிருந்து வெளிவருகின்றது.